# KARNA-THE GIVER

## A TAMIL DRAMA

BY

**Rao Bahadur P. SAMBANDAM,**
B.A., B.L.,

Author of . .

"The Two Sisters," "Galava," "Manohara," "Blind Ambition," "The Two Friends," "Fate and Love," "Sarangadhara," "Simhalanatha," "Pushpavalli," "Amaladitya," "Magapathi," "Farces," "Siruthondar," "The Golden Fetters," "True Love," "The Bandit Chief," "Markandeya," "The Fair Ghost," "The Merchant of Vanipura,' "The Wedding of Valli," "The Eve of Love," "Vijayarangam," "As you like it," "Ratnavali," "Lord Buddha," "The Tragedy of Silence," "The Good Fairy," "Geetha Manjari," "Harischandra," "As We Sow-So We Reap," "The Curse of Oorvasi," "Chandrahari," "The Demon Land," "Sabapathy Part I," "The Pongal Feast' or "Sabapathy" Part II, "A Rehearsal' or "Sabapathy" Part III, "Blessed in a Wife," "The Dancing Girl "Subbadra Arjuna' etc in Tamil, and "Harischandra," and "Yayathi" in English.

*FIRST EDITION.*

Madras:

PRINTED BY DOWDEN AND CO., AT THE "PEERLESS PRESS," 21, Sunkurama Chetty Street.

1928

*All Rights reserved.*

[Price per Copy As.

உ

# கொடையாளி-கர்ணன்

ஒரு தமிழ் நாடகம்

ராவ் பஹதூர்

**ப. சம்பந்த முதலியார்**, பி-ஏ., பி-எல்.,

அவர்களால் இயற்றப்பட்டது.

இந்த நூலாசிரியரால் இயற்றப்பட்ட மற்ற நூல்கள்:

"லீலாவதி சுலோசனா" "கள்வர் தலைவன்," "மனோஹரன்,"
"இரண்டு நண்பர்கள்," "சாரங்கதரன்," "நற்குல தெய்வம்,"
"சத்ருஜித்," "யயாதி" "மார்க்கண்டேயர்," "விஜயரங்கம்,"
"காதலர் கண்கள்," "பேயல்ல-பெண்மணியே." "மகபதி,"
"மெய்க்காதல்," "பொன் விலங்குகள்," "சிம்ஹளநாதன்,"
"விரும்பிய விதமே," "சிறுத்தொண்டர்," "காலவரிஷி,"
"வாணீபுர வணிகன்," "ரஜபுத்ர வீரன்," "ஹரிசசந்திரன்,"
"சந்திரஹரி," "புஷ்பவல்லி," "கீதமஞ்சரி," "ப்ரஹசனங்கள்
"ஊர்வசியின் சாபம்," "அமலாதித்யன்" "சபாபதி முதல் பாகம்,
"பொங்கல் பண்டிகை" அல்லது சபாபதி இரண்டாம் பாகம்,
"ஓர் ஒத்திகை" அல்லது சபாபதி மூன்றாம்பாகம், "வள்ளி மணம்"
"முற்பகற்செய்யின் பிற்பகல் விளையும்," "புத்த அவதாரம்,"
"வேதாள உலகம்," "மனைவியால் மீண்டவன்" "தாசிப்பெண்"
"சுபத்திரார்ஜுனா" முதலியன.

முதற் பதிப்பு

சென்னை:

டௌடன் கம்பெனியாரின்

"பியர்லெஸ்" அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1928

காபி ரைட்]

[விலை [redacted]

# Preface to the First Edition.

This is a drama based on certain incidents of the Maha Bharata, in the life of Karna, whose life had always a great attraction to me even from my child hood.

All societies professional and amateur are hereby informed that they will have to pay a royalty to me before staging this or any other drama by me and get my permission before doing so, otherwise they make themselves liable to be prosecuted for breach of copyright, which is now made a criminal offence.

"PAMMAL LODGE"
G. T. MADRAS.
18th Nov. 1928.

THE AUTHOR.

INSCRIBED

TO

THE BELOVED MEMORY OF

**MY PARENTS**

P. VIJIARANGA MUDALIAR,

and

P. MANICKAVELU AMMAL,

and

**MY FRIEND**

C. RANGAVADIVELU.

# கொடையாளி-கர்ணன்

## நாடக பாத்திரங்கள்

| | | |
|---|---|---|
| ஸ்ரீகிருஷ்ண மூர்த்தி | ... | உலகனைத்தும் காத்திடும் கடவுள் |
| தர்மராஜன்<br>பீமன்<br>அர்ஜுனன்<br>நகுலன்<br>சஹாதேவன் | ... | பஞ்சபாண்டவர்கள் |
| கர்ணன் | ... | குந்திதேவியின் மூத்த மகன் |
| பரசுராமர் | ... | ஜமதக்னியின் புதல்வர் |
| தேவேந்திரன் | ... | அர்ஜுனன் தந்தை |
| சூரியபகவான் | ... | கர்ணன் தந்தை |
| துர்யோதனன் | ... | திருதராஷ்டிரன் புதல்வன் |
| சகுனி | ... | துர்யோதனன் மாமன் |
| சல்லியன் | ... | பாண்டவர்களுடைய மாமன் |
| அஸ்வகர்ணன்<br>விஸ்வகர்ணன் | ... | ஹஸ்தினபுரத்தருகி லிருக்கும் இரண்டு ஏழைகள் |
| குந்திதேவி | ... | பாண்டவர்களின் தாயார் |

*தேர்ப்பாகன், அஸ்வகர்ணன் மனைவி, விஸ்வகர்ணன் மனைவி*
*யாசகர்கள், வாயிற்காப்போன் முதலியோர்.*

கதை நிகழ் காலம்:—*துவாபரயுக முடிவு.*

# கொடையாளி-கர்ணன்

## முதல் அங்கம்

### முதற் காட்சி

இடம்:—ராஜவீதி.

கர்ணனுடைய ரதத்தின் கீழ் ஓர் கன்று அகப்பட்டு இறந்து கிடக்கிறது. அதன் தாய் பக்கத்தில் நின்று கண்ணீர்விடுகின்றது. கர்ணன் ரதத்தை விட்டிழிந்து நின்று இதைக் கண்ணுற்று துக்கித்து நிற்கிறான். (தோற்றக்காட்சி)

க. அந்தோ! பாபம்! பாபம்!

ஓர் பிராம்மணன் ஓடிவருகிறான்.

பி. அரசப்பதரே! என்ன பாபமிழைத்தனை? நான் குழந்தைபோல் வளர்த்து வரும் என் கன்றுக்குட்டியின் மீது உன் ரதத்தைச் செலுத்திக்கொன்றையே கொடும்பாபி! கோஹத்தி செய்தனையே கொடிய தோஷி!

க. ஸ்வாமி, என்னை மன்னிக்கவேண்டும். நான் தேர்விட்டுக்கொண்டு போகும் பொழுது இக்கன்று தானாக வந்து தேர்க்காலில் அகப்பட்டுக் கொண்டால் அதற்கு நான் என்ன செய்வது? நான் வேண்டுமென்று இதைக் கொல்லவில்லையே!

பி. அரசப்பேதையே! அக்கன்றோ அறிவில்லாத ஜந்து, நீயோ அறிவுடைய மனிதன், ஆகவே அப்படிப்பட்ட அறிவில்லாப் பிராணிகள் உன் தேர்க்காலில் அகப்படாதபடி அதிஜாக்கிரதையாகச் செலுத்தவேண்டியது உன் அவஸ்யமான கடமையல்லவா?

க. அந்தோ! இந்த நியாயமறியாமற் போனேனே!

பி. ஆகவே பிடிசாபம்! உனக்குச் சமானமான வீரனுடன் நீ போர்புரியுங்காலையில் உன் தேர்ச்சக்கரம் பூமியில் புதைந்துபோம். அதைத் தோள் கொடுத்து நீ தூக்க யத்னம் செய்கையில் உனக்கு மிர்த்யு உண்டாகும். எவ்வாறு இக்கன்று தேர்ச் சக்கரத்தின் கீழ் இறந்ததோ அப்படியே நீயும் உன் தேர்ச்சக்கரத்தின் கீழ் இறப்பாய்!

க. ஐயோ அந்தணரே! அறியாமையால் இழைத்த இப்பாபத்திற்கு பிராயச்சித்தம் ஒன்றுமில்லையோ?

பி. உண்டு! கேளாய் கர்ணனே! இறந்த கன்றின்மீது அதன் தாய்புரண்டு விழுந்தலறி அழுதது போல் உன் உடல் மீது உன் தாய் வெருண்டு விழுந்தழுவாள், அப்போது இப்பாபம் நீங்கிவிடும். இனியாவது ஜாக்கிரதையாகப் பிழை! [விரைந்துபோகிறான்.]

க. ஆ! எப்படிப்பட்ட துன்பத்திலும் இன்பம் ஒன்றிருக்கிறது. இது வரையில் என்னையீன்ற அன்னையாரோ? அவர்கள் உயிரோடிருக்கிறார்களோ? என்னவோ என்று சந்தேகித்த என் மனத்துக்கு, இது ஓர் பெறும் ஆறுதலைத்தருகிறது. இந்தப் பிராம்மணர் கூறியவார்த்தைகளால் என் அன்னை உயிரோடிருக்கிறார்கள் என்னும் உண்மை அறிந்தேன்—அறிந்தேன்!—விதிவலிதேயாயினும் கொடிதன்று.

**காட்சி முடிகிறது.**

# இரண்டாம் அங்கம்

## முதற் காட்சி.

இடம்:—மஹேந்திர பர்வத சாரலில் பரசுராமர் ஆஸ்ரமம்.

பரசுராமரும் கர்ணனும் வருகிறார்கள்.

ப. அப்பா சிஷ்யா, இப்பொழுது நான் கற்பித்தது பிரம்மாஸ்திரப் பிரயோகம். அதை நீ மிகவும் ஜாக்கிரதையாகக் காப்பாற்றி வரவேண்டும். இந்தப் பிரம்மாஸ்திர மந்திரம் மிகவும் உத்கிருஷ்டமானது, ரகசியமுமானது, இதைச்சாதாரண ஜனங்களுக்குக்கற்பிக்கலாகாது. நான் ஒரு காரணம் பற்றி உன்னைப் போன்ற பிராம்மணர்களுக்குத் தவிர மற்றவர்களுக்கு இதைத் தெரிவிப்பதில்லையென்று சபதம் செய்திருக்கிறேன்; அதன்படியே நீயும் உத்தமப் பிராமணர்களல்லாத, க்ஷத்திரியர்கள் முதலிய கீழ் ஜாதியாருக்கு இதை ஒரு காலும் தெரிவிக்காதே!

க. ஆசார்யரே, தங்கள் ஆக்ஞைப்படி.

ப. அன்றியும் இதைப்பிரயோகஞ் செய்வதிலும் அதி ஜாக்கிரதையாகயிருக்கவேண்டும் சாதாரண சமயங்களில் இதைப் பிரயோகிக்கக் கூடாது. மஹத்தான ஆபத்காலத்திலும், வேறொன்றாலும் வெற்றிபெறுவது கஷ்டம் என்று தோன்றும்படியான காலங்களிலுந் தான் இதைப் பிரயோகம் செய்யவேண்டும்; அன்றியும் இந்த அஸ்திரப்பிரயோகம் அறியா ஒருவன் மீதுதான் பிரயோகிக்கவேண்டும். ஏனெனில் உன் எதிரியும் இதை அறிந்தவனாயிருந்து அவனும் உன்மீது இதே அஸ்திரத்தைப் பிரயோகம் செய்வானாயின் இவ்விரண்டு அஸ்திரங்களும் ஒன்றை ஒன்று எதிர்த்து உலகத்துக்கே பெருங் கெடுதி சம்பவிக்கும். இதை யெல்லாம் ஜாக்கிரதையாக மறவாது வைத்திரு உன்மனத்தகத்தில்.

க. அப்படியே சுவாமி.

ப. இதனுடன் இன்றைய அஸ்திரப்பயிற்சி போதும், எனக்கு இளைப்பாக இருக்கின்றது, நான் சற்று சயனிக்கவேண்டும், நமது பர்னசாலைக்குப் போய் என் தலைக்கு ஒரு தர்ப்பைத்தலையணை கொண்டுவா.

க ஸ்வாமி, நமது பர்னசாலை வெகுதூரம் இருக்கின்றது, நீரோ மிகவும் களைத்திருக்கிறீர், அங்குபோய் திரும்பி வரவெகு நேரமாகும், ஆகவே என்துடைமீது தலை வைத்து சயனித்துத் தாங்கள் நித்திரை செய்யலாமே, தங்களுக்கு ஆட்சேபனை இல்லாவிட்டால்.

ப. அப்பாசிஷ்யா, அப்படியே செய்கிறேன். உன் அன்பிற்கு மெச்சினேன்.

[கர்ணன் உட்கார, அவன்துடை மீது பரசுராமர் சயனிக்கிறார்.]

தேவேந்திரன் ஒருபுறமாக வருகிறான்.

தே. ஸ்ரீமந் நாராயண மூர்த்தி கூறியது வாஸ்தவமே, இந்தப் பரசுராமர் கர்ணனுக்கு பிரம்மாஸ்திரத்தையும் கற்பித்து விட்டார். இனி இவனை வெல்வார் ஒருவருமில்லை, இனி வரப்போகிற யுத்தத்தில் நம்முடைய குமாரன் இவனை எதிர்க்கும்படி நேரிடுங்கால், அவர் கூறியபடி நாம் யுக்தி செய்யாவிட்டால், விஜயன் இவனை வெல்வது அசாத்தியமாகும். ஸ்ரீ மந்நாராயண மூர்த்தி கூறிய யுக்தியின் படி நாம் ஒரு வண்டுருவெடுத்து கர்ணன் துடையைத் துளைப்போம். [மறைந்து அவ்வாறே செய்கிறான்.]

க. அந்தோ! என்ன இது! ஏதோ துடையைத் துளைக்கிறது! வண்டாகத் தானிருக்கவேண்டும். இதை எப்படி அகற்றுவது? துடையை உயர்த்தி இதை எடுத்து விடலாமென்றாலோ நமது ஆசாரியருக்கு நித்திரை பங்கம் நேரிடும், அவரோ நமக்கு அஸ்திரப் பயிற்சி கற்பிப்பதற்காக இன்று மிகவும் சிரமப்பட்டிருக்கிறார்— அயர்ந்து நித்திரை செய்கிறார் அந்த அலுப்பினால். நமக்கு எவ்வளவு தேகபாதை யிருந்தாலும் இருக்கட்

டும், இதை நாம் பொறுத்துக் கொண்டிருப்போம் அவர் விழிக்கும் வரையில்—ரக்தம் என்ன பெருகுகின்றது! இதற் கெல்லாம் பயப்படலாமா நான்!

ப. [கண்விழித்து] என்ன இது!—ரக்தம்!—அடே சிஷ்யா! என்ன இது? [எழுந்திருக்கிறார்.]

க. ஸ்வாமி, ஒன்றும் பயப்படவேண்டாம். தாங்கள் என் துடை மீதே சயனித்து உறங்கும் பொழுது ஒரு வண்டானது நானறியாதபடி என்துடையைத் துளைக்க ஆரம்பித்து விட்டது, அதை அகற்ற என் துடையை அசைப்பேனாயின் தமக்கு நித்திரை பங்கம் வருமே யென்று அஞ்சி, அதைப் பொறுத்துக்கொண்டிருந் தேன், இப்பொழுது அந்த வண்டு தாம் எழுந்ததும் பறந்து போய்விட்டது; ரக்தம் பெரிகியதினால் தாம் விழித்தெழுந்தீர், மன்னிக்கவேண்டும். இதோ இனி ரக்தம வராதபடி கட்டிவிடுகிறேன்.

[அங்ஙனமே செய்கிறான்.]

ப. சிஷ்யா! இப்படிவா!—நீ எந்த ஜாதியிற் பிறந்தவன்? உண் மையைச் சொல் நீ பிராம்மணன என்பதை நான் நம்ப மாட்டேன். என் தாயார் முன்னிலையில் நான் சபதம் செய்தபடி இந்த க்ஷத்திரியப் பதர்களை யெல்லாம் இருபத்தொரு முறை துவம்சப்படுத்தி, அவர்கள் குருதியில் என் தந்தைக்குக் கர்மம் செய்த எனக்கே, இந்த ரக்தத்தைப் பார்ப்பதென்றால் இன்னும் நெஞ்சம் நடுங்குகிறது, சிறுவனாகிய நீ இந்த தேக பாதையையும் பொறுத்துக்கொண்டு இவ்வளவு ரக்தபெருக்கைக் கண்டும், நெஞ்சம் கலையாது எங்ஙன மிருந்தாய்? நீ பிராம்மணனல்ல, பிராம்மணனா யிருந்தால் இதனைப் பொறுத்திருக்கமாட்டாய், பயந்திருப்பாய், நீ க்ஷத்திரி யனென்றே நினைக்கிறேன். உண்மையை உரைத்திடு! என் ஆணை!

க. [அவர் பாதத்தில் விழுந்து] ஸ்வாமின்! ஆசாரியரே! மன்னித்தருளவேண்டும்! மன்னித்தருளவேண்டும! அடியேன் எப்பிறப்பினன் என்பதை அறியேன். என்னை ஒரு சூதன் கங்கையில் மிதந்து வந்த ஒரு பெட்டியுட் கண்டெடுத்து வளர்த்து வருகிறான்; அது தான் நான் அறிந்தது! நான் பிராம்மணன் என்று கூறியது தவறு தான் மன்னிக்கவேண்டும்! மன்னிக்கவேண்டும்!

ப. அடே! பாபி! நான் பிராம்மணர்களுக்குத்தவிர மற்ற எந்த ஜாதியருக்கும் வில்வித்தை கற்பிப்பதில்லையென்று நான் செய்த சபதத்தினின்றும் என்னைத்தவறும்படிச் செய்தாயல்லவா?

க. ஆசாரியரே! நான் இனிபொய் புகலேன்! பிராம்மணன் அல்லவென்றால் தாம் எனக்கு வில்வித்தை கற்பிக்க மாட்டீர் என்று கேள்விப்பட்டே இங்ஙனம் செய்தேன், எங்கள் வைரியாகிய விஜயனை வெல்லும் பொருட்டு; ஸ்வாமி! எப்படியாவது என்னை மன்னித்தருள வேண்டும்.

ப. அடே பாதகா! அப்படியா சமாசாரம்! எந்த விஜயனை வெல்லும் பொருட்டு இவ்வண்ணம் எண்ணிப் பொய் புகன்றாயோ, அவனை எதிர்க்கும் பொழுதெல்லாம் நான் உனக்கு கற்பித்த வில்வித்தையெல்லாம் உனக்குப்பயன் படாமற் போகுமாக! இதுவே என் சாபம்'—குருத்துரோகியாகிய உன்னை இனிபார்த்தலும் பாபம்!

[விரைந்து போகிறார்.]

க. அந்தோ! நான் கற்ற வித்தையெல்லாம் எதற்காயது! ஒரு பொய் பேசியதினால் நான்கோரியபலனை இழந்தேனே! என் செய்வது! [போகிறான்.]

காட்சி முடிகிறது.

## முதல் இடைக்காட்சி.

அஸ்தினபுரத்தை யடுத்த ஓர் கிராமத்தில் ஓர் பாழ்மண்டபம்.

அஸ்வகர்ணன் வருகிறான்.

அ புறப்படும் பொழுதே அபசகுனமாச்சுது, அப்பொழுதே தெரியும் எனக்கு! இப்பொழுது போனால் ஒன்றும் கிடைக்காது நமக்கு என்று! அந்தக்கழுதை முண்டைக்கு எவ்வளவு சொன்னாலும் தெரியவில்லை! போங்கள், போங்கள்! என்று தொந்திரவு செய்தாள்! போய் என்ன ஆச்சுது! கர்ணமகாராஜா அவர் அரண்மனையிலில்லை, வேட்டையாடப் போய்விட்டார் என்று சொல்லிவிட்டார்கள்! இனிநாம் என்ன செய்வது? வெறுங்கையுடன் வீட்டிற்குப்போனால் கொடுப்பாள் பூசை! எவனையாவது ஏமாற்றி ஏதாவது சம்பாதித்துக் கொண்டுபோகவேண்டும்—எனக்கு ஒரு யுக்திதோன்றுகிறது. இங்கிருக்கும் மணல் பெரும் மணலாயிருக்கிறது இதை ஒரு மூட்டையாகக்கட்டி அரிசி என்று எவனையாவது ஏமாற்றிவிட்டு அந்தக்காசைக் கொண்டுபோய்க் கொடுப்போம். [அங்கிருக்கும் மணலைமூட்டையாகக்கட்டுகிறான்.] வெயில் இன்னும் கொடுமையாயிருக்கிறது, இப்பாழ்மண்டபத்தில் சற்றுபடுத்துறங்கிப் பிறகு புறப்படுவோம்.

[மூட்டையைத்தலையின் கிழ்வைத்துப் படுத்துறங்குகிறான்.]

விஸ்வகர்ணன் ஒரு புறமாகவருகிறான்.

வி. என்ன வென்றாலும் இந்த ராகுகாலத்தில் மாத்திரம் வீட்டைவிட்டுப் புறப்படக் கூடாது. அதைச்சொன்னால் கேட்டாலல்லவோ அந்தப்பட்டிமுண்டை! எப்படியும் புறப்படத்தான் வேண்டும் என்று ஓரே பிடிவாதம் பிடித்தாள்! இப்பொழுது என்ன ஆச்சுது! ஒன்றும் கிடைக்கவில்லை' அவ்வளவு தான். ராமேஸ்வரம் போனாலும் சனீஸ்வரன் விடவில்லை யென்று நம்முடைய துர் அதிர்ஷ்டம் நம்மை விடவில்லை. கர்ணமகாராஜா இல்லை என்னாது கொடுக்கும் தாதா தான். நம்முடைய அதிர்

ஷ்டம் நாம்போன சமயம் அவர் ஊரிலேயே இல்லை! இதைச்சொன்னால் நம்பமாட்டாள் நம்முடைய மூதேவி! இந்தச் சாணி மூட்டையை சாப்பாடு என்று சொல்லி எவன் தலையிலாவது கட்டி, காசுவாங்கிக்கொண்டு நம்வீடு போய்ச் சேரவேண்டும்—அதோ யாரோ ஒருவன் படுத்துறங்குகிறான், தலையின் கீழ் ஏதோ மூட்டையிருக்கிறது. [அருகிற்போய் மூட்டையைத் தொட்டுப் பார்த்து] அரிசி போலிருக்கிறது. மெல்ல இவனை ஏமாற்றி நம்முடைய மூட்டையைக் கொடுத்து இதைப் பெறவேண்டும்—மெல்ல எழுப்புவோம்—[உறக்க] அப்பாடா! [அஸ்சுவகர்ணன் விழித்துக்கொள்கிறான்] நன்றாகச் சாப்பிட்டுவிட்டு இந்த சர்க்கரை பொங்கல் மூட்டையையும் தூக்கிக்கொண்டு போவதென்றால்! அதுவும் இந்த வெயிலில்!

அ. யாரையா அது? வழிப்போக்கரா?

வி. ஆமாங்கள்.

அ. எங்கிருந்து வருகிறீர்கள்?

வி. கர்ண மகாராஜாவின் அரண்மனையிலிருந்து—ஆஹா! என்ன தாதா! என்ன தாதா! தாதா என்றால் அவருக்குத் தான் தகும்!

அ. கர்ண மகாராஜா அரண்மனையி லிருந்தாரோ? ஏதோ வேட்டைக்குப் போயிருப்பதாகக் கேள்விப்பட்டேனே?

வி. ஆம், போயிருந்தது வாஸ்தவம் தான், திடீரென்று வேட்டையை முடித்துக் கொண்டு திரும்பி விட்டார்—அடடா! என்ன தயாள குணம்! என்ன தாராளம்! அவருடைய அரண்மனைக்கு ஆறுகாத சுற்றளவில் கூட இல்லை என்கிற சப்தமே இல்லை! இதோ பாருங்கள்! நான் தானம் வாங்க அவரிடம் போகவில்லை, இப்படிப்பட்ட கொடையாளியைக் கண்குளிரப் பார்த்துவிட்டுப் போகவேண்டும் என்னும் இச்சையுடன் போனேன், என்னைப் பார்த்ததும் சிம்மாசனத்தை விட்டு இறங்கி வந்து, என்ன வேண்டும் தங்களுக்கு என்று கேட்டு,

நான் ஒன்றும் வேண்டாம், தாதாவாகிய தங்கள் தரிசி னம் கிடைத்தது போதும் என்று சொல்லியும் கேளாது, ஏதாவது பெற்றுக் கொண்டு போக வேண்டுமென்று பலவந்தித்தார். எனக்கு வேறொன்றும் வேண்டாம், கொஞ்சம் பசியா யிருக்கிறது என்று சொல்ல, உடனே மடப்பள்ளிக்கு அழைத்துச் சென்று பரமான்ன போஜ னம் அளித்தார் அது மட்டுமோ, நான் சாப்பிடும்பொ ழுது எப்படியோ கவனித்து எனக்கு அங்கு பரமாறிய சர்க்கரைப் பொங்கலின்மீது கொஞ்சம் பிரியம் என்ப தைக் கண்டு, சமயற்காரனை அழைதது இவ்வளவு பெரிய சர்க்கரைப் பொங்கல் மூட்டையைக் கொடுப்பித்து என்னை அனுப்பினார். சாப்பாட்டின் மேல் இதைத் தூக் கிக் கொண்டு நடப்பதென்றால் கஷ்டமா யிருக்கிறது! இன்னும் ஒரு காதம் நடக்க வேண்டி யிருக்கிறது இந்த வெயிலில்.

அ. தங்கள் ஊர் எதுவோ?

வி இதற்குத் தெற்காக ஒரு காத தூரத்தில் சாணிகுளம் என்று ஒரு சிறு கிராமம். தாங்கள் எந்த ஊரோ?

அ வடக்கே இரண்டு காத தூரத்தில் மணலூர் என்று ஒரு கிராம மிருக்கிறது, அங்கே இருப்பவன் நான்

வி. தாங்கள் என்னைவிட இந்த வெயிலில் அதிக தூரம் போக வேண்டி யிருக்கிறாற் போலிருக்கிறதே! அதுவும் எதோ ஒரு மூட்டையையும் தூககிக்கொண்டு போக வேண்டி யிருக்கிறாற் போலி ருக்கிறதே!

அ ஆமாம், என் துர் அதிர்ஷ்டம் நான் போனபோது கர்ண மகாராஜா திரும்ப வில்லை, பிறகு நான் பசியால் வருந்தி துக்கப்பட்டுக் கொண்டிருநததைப் பார்த்து உங்களைப் போன்ற ஒரு புண்ணியவான், அப்பா, என்னிடம கொஞ் சம அரிசி இருக்கிறது அதைச சமைத்து சாப்பிடு என்று சொல்லிக் கொடுத்தார் எனக்குச் சமைக்கத்தெரி யாது; எஙகள் ஊருக்குக் கொண்டுபோய் என் பெண்

சாதியிடம் கொடுத்து சமைத்தப் பிறகு தான் என் பசி தீரவேண்டும்! என் துர் அதிர்ஷ்டம்! நான் என்ன செய்வது? நீங்கள் கொடுத்து வைத்தவர்கள்! உங்களுக்குச் சாப்பாட்டின்மேல் சர்க்கரை பொங்கலும் கிடைத்தது! பசியால் வருந்தும் எனக்கு அரிசி தான் கிடைத்தது!

வி. அதற்காகத் தாங்கள் வருத்தப்பட வேண்டாம். எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. தாங்கள் மிகவும் பசியால் களைத்திருக்கிறீர்கள். நானோ பசியாறி இருக்கிறேன். நீங்கள் இந்த சர்க்கரைப் பொங்கல் மூட்டையை எடுத்துக் கொள்ளுங்கள். என்னிடம் அந்த அரிசி மூட்டையை கொடுத்து விடுங்கள். நான் சாவகாசமாய் என் வீட்டிற்குக் கொண்டு போய் சமைத்துச் சாப்பிடுகிறேன்.

அ. அப்படியே! மிகவும் சந்தோஷம்! இப்படிப்பட்ட தயாள குணம் கிடைப்பது மிகவும் கடினம். கர்ண மகாராஜனுக் கப்புறம் உம்மையே தாதா என்று சொல்ல வேண்டும். இந்தாருங்கள் அரிசி மூட்டை. [கொடுக்கிறான்.]

வி. இந்தாருங்கள் சர்க்கரை பொங்கல் மூட்டை!—அதோ தெரிகிறதே அந்தக் குளத்தருகிற் போய் கை கால்களைச் சுத்தி செய்து கொண்டு சீக்கிரம் புசியுங்கள்—புறப்படுங்கள்! எனக்கும் நேரமாகிறது.

அ. ஆமாம்! இதோ புறப்பட்டு விட்டேன். பசிதாள முடியவில்லை!

[இருவரும் விரைவாக ஒவ்வொரு பக்கமாகப் போகிறார்கள் மூட்டைகளைத் தூக்கிக்கொண்டு.]

காட்சி முடிகிறது.

# மூன்றாம் அங்கம்.

## முதற் காட்சி.

இடம்:—கர்ணன் மாளிகையின் முற்றம்.

காலம்:—நடுப்பகல்.

தானம் பெற்ற பிராம்மணர்கள் தாங்கள் பெற்ற பொருள்களை மூட்டைகளாகக் கட்டிக்கொண்டிருக்கின்றனர்; சேவகன் ஒருபுறமாக நிற்கிறான்.

சேவ. ஐயா, ஸ்வாமிகளே! அரண்மனையிலிருக்கிறதை யெல்லாம் தான் துடைத்தாய் விட்டதே! இனிபுறப்படுகிறது தானே? இனி இன்னும் ஏதாவது கேட்பதற்கு இருக்கிறதா என்று பார்க்கிறீர்களா! இந்த அரண்மனை ஒன்று தான் இருக்கிறது பாக்கி! அதையும் கேட்டு விடப்போகிறீர்கள்! போதும் போதும் புறப்படுங்கள்!

ஓ. பி. அப்பா, இதோ புறப்படுகிறேன். இந்த மூட்டையைத் தூக்க முடியவில்லை, இதைக் கொஞ்சம் பிடித்து என் தலை மீதுவை.

சேவ. ஓய்! பிராம்மணு! இந்தப்பேராசையேன்? உம்மால் தூக்கும்படியான பொருளைக்கேட்கிறது தானே! அதற்குமேல் ஏன் கேட்டீர்? பேராசைப்படுவானேன் இப்பொழுது பெருங்கஷ்டப்படுவானேன்!

கர்ணன் வருகிறான்.

க. அப்பா, அப்படி அவமரியாதையாக அவர்களைப் பேசாதே! அது பாபமாகும். ஸ்வாமி, என்ன வேண்டும் தங்களுக்கு?

ஓ. பி. இம்மூட்டையைத் தூக்கி என் தலைமீதுகொஞ்சம் வைக்கவேண்டும், அதிகபளுவாயிருக்கிறது.

க எனக்கு உத்தரவு கொடுக்கவேண்டும். [தூக்கி பிராம்மணன் தலையில் வைக்க, அவன் தள்ளாடிக்கொண்டு போகிறான்] அப்பா, இனி இம்மாதிரியாக யாசகர்களை தூஷியாதே. அது பெரும் பாபமாகும். தானம் கொடுக்கும் பொழுது முகத்தை சற்றே சுளித்தாலும், அது சரியான தானமாகாது, பாபமாகும்—போ—நான் கூறியதை இனிமற வாதே!

[சேவகன் போகிறான்; ஒரு பிராம்மணர் தவிர மற்றெல்லோரும் போகிறார்கள்.]

க. இது யார் இது? ஸ்வாமி, தாங்கள் விரும்புவது ஏதாவதுண்டோ? என்னிடத்திலுள்ள எதை வேண்டினும் கேளும் தருகிறேன்.

பிரா. கர்ண ராஜனே! உன்னிடம் தானம் பெற நான் இங்கு வந்தவனல்ல.

க. ஆயின் தாங்கள் என்ன காரணம் பற்றி வந்தீரோ தயை செய்யவேண்டும்.

பிரா. உன்னுடைய நன்மையை நாடி உனக்கொரு ஹிதோபதேசம் செய்யவே வந்திருக்கிறேன்.

க. தன்யனானேன்! சுவாமி அங்ஙனமே செய்யவேண்டும். காத்திருக்கின்றேன்.

பிரா. அப்பா, இப்படி கேட்பவர்களுக்கெல்லாம் எப்பொழுதும் இல்லை என்னாது வழங்க உன்னால் எப்பொழுதும் முடியுமா? செல்வம் நிலையிலாப் பொருளாயிற்றே என்று யோசிக்கிறேன்

க. ஸ்வாமி, தங்களுக்கு தெரியாததன்று! இந்த உடம்பு மாத்திரம் அழியாப்பொருளா? இந்த தேகம் எப்பொழுதும் சந்தேகமானதல்லவா? ஆகவே எப்பொழுதும் அழியும் படியான இவ்வுடம்பைக் கொண்டு, என்றும் அழியாப்புகழ் உடம்பைப் பெறவேண்டியது மனிதர்கள் கடமையல்லவா? அன்றியும் நான், யார் எதைக் கேட்ட போதிலும் கொடுப்பதாக எப்பொழுதும் சொன்னதில்

லேயே. அந்த சக்தி பரம் பொருளாகிய பகவான் ஒரு வருக்கே உரித்தாயது. என்னிடத்திலுள்ள எதைக் கேட்ட போதிலும் கொடுப்பதாகத்தான் துவஜம் கட்டியிருக்கிறேன். அது அசாத்தியமான தல்லவே!

பிரா. உன் உயிரைக் கேட்டால் கொடுப்பாயா?

க. ஸ்வாமி, என்றைக்கிருந்தாலும் ஒரு நாள் போகவேண்டிய இந்த அற்ப உயிரை ஒருவன் ஒரு பொருட்டாக மதித்து தேஹி என்று கேட்பானாயின் நான் ஏன் அதைக் கொடுக்கலாகாது? கட்டாயமாகக் கொடுப்பேன். தங்களுக்கு அது வேண்டுமோ?

பிரா. அப்பா கர்ணா! இப்படிபேசும் உனக்கு நான் என்னசொல்லப்போகிறேன்' ஆயினும் எனது வாத்சல்யத்தால் சொல்லவேண்டியதைச் சொல்லுகிறேன். அப்புறம் உன் இஷ்டம்—கர்ணா! உனக்கொரு ரகசியம் சொல்லுகிறேன்கேள். கிருஷ்ணபகவானது ஏவலால் தன் குமாரனாகிய விஜயனைக் காக்கவேண்டி தேவேந்திரனைவன் இன்று உன்னிடம் வந்து உன்னுடைய கவசகுண்டலங்களைத் தானமாககேட்கப் போகிறான்; உன்னிடம் அக்கவச குண்டலங்கள் இருக்கும் வரையில் உன்னை வெல்ல விஜயனால் முடியாது. இச்சூதையறிந்தே, அவைகளைப் பெறமுயலுகிறான் தேவேந்திரன் சீக்கிரம். என் வார்த்தையைக் கேட்பாயானால் அவைகளை தானமாகக்கொடாதே! கொடாதே! இப்பொழுதே சொன்னேன்.

க. ஸ்வாமி! இந்தப் பொய்யாகிய மெய்யைக் காப்பாற்ற, மெய்யாகிய புகழை அழித்துக்கொள்வேனா! ஸ்வாமி, தங்கள் வார்த்தையைத்தட்டுவதாக எண்ணலாகாது. என்னால் தாம் கூறியபடி செய்ய முடியாது, மன்னிக்க வேண்டும்.

பிரா. சரி ஆனால் உன் விதி! என் கடமையை நான் தீர்த்து விட்டேன்.

க. ஸ்வாமி, இவ்வளவு தூரம் எனக்காகக் கஷ்டம் எடுத்துக்கொண்ட தாம்யாரோ தெரியவில்லை?

பிரா. கர்ணு! நான் தான் உன் தந்தையாகிய சூரியன்! புத்ரன் என்னும் வாத்சல்யத்தால் உன்னைக் காப்பாற்ற வேண்டி இவ்வுருவெடுத்து வந்தேன்! இனி நான் இங்கிருக்கலாகாது! அதோ வருகிறான் இந்திரன்!

[மறைகிருர்]

க ஆஹா! நான் சூரியனது குமாரனே? எனது தாய் தந்தையரை அறிய வேண்டுமென்று அநேக வருஷங்களாக முயன்றதற்கு, என் தந்தை இன்னாரென அறிந்தேன்? என்னுடைய தாய் யாரோ?—நான் எப்படி சூரியனுக்குமகனாக உதித்தேன்?

[வெளியில் வாசற் காப்போன்] ஏ! கிழம்! நேரமாய் விட்டது, தானமெல்லாம் கொடுத்தாயதுபோ!

க. சேவகா! இப்படிவா! [சேவகன் வருகிருன்.] தானம் கேட்கயாராவது வந்தால் அவர்களைத் தடுக்கக் கூடாதென்று உனக்கு எத்தனை முறைசொல்லியிருக்கிறேன். அது பெரும்பாபமப்பா, அப்படிச் செய்யாதே இனிமேலாவது, போய் வந்தவரை அனுப்பு.

சேவ. தங்கள் சித்தம் [போகிருன்.]

தேவேந்திரன் பிராம்மண உருக்கொண்டு வருகிருன்.

க. ஸ்வாமி, பிராம்மணோத்தமரே! வாருங்கள்! உட்காருங்கள்!

[அர்க்கியபாத்யயாதிகளைக் கொடுத்து உபசரிக்கிருன்.]

ஸ்வாமி, தங்களுக்கு ஏதாவது வேண்டியிருக்கிறதோ நான் தரத்தக்கது.

தே. அப்பா! கர்ணு! என்துர் அதிர்ஷடத்தை என்னென்று சொல்லுவேன், என் ஆசையானது முன்னுக்கிழுக்க என் கிழத்தனமானது பின்னுக்கிழுக்க, என் கைகால்கள் வழுக்க, கனவருத்தப்பட்டு நெடுந்தூரத்திலிருந்து, உன் பெயர் கேட்டு நடந்து வந்தேன். இன்றைத்தினம்

தானம் எல்லாம் கொடுத்தாய் விட்டது என்று சேவகன் சொன்னான், என் தௌர்பாக்கியம்!

க. ஸ்வாமி, காலம் கடந்து வந்ததாகக் கவலைப் படவேண்டாம் உள்ளதைக் கொடுப்பதற்குக் காலம் என்று ஒன்றுண்டோ! உயிருள்ளளவும் உகந்த காலம் தான் ஆகவே என்னிடத்திலுள்ள எதைப் பெறவிரும்புகிறீரோ கேளும் கொடுக்கச் சித்தமாயிருக்கிறேன்.

தே. அப்பா, கற்பகத்தருவைப்போல் கேட்டதை யெல்லாம் கொடுப்பாயா?

க. ஸ்வாமி, அந்த சக்தி எனக்கில்லை. என்னிடத்திலுள்ளதைக்கேளும், எதை வேண்டினும் தருகிறேன்.

தே. ஆனால் உன்னுடைய கவசகுண்டலங்களைக் கொடு எனக்கு தானமாக!

அசரீரி. (ஆகாயத்தில்) குவலயம் புகழும் கொடையாளனே! கர்ணா! வந்திருப்பவன் இந்திரன்' கிருஷ்ணனுடைய ஏவலினால் அர்ச்சுனனுக்குச் சகாயமாக அவன் வெற்றி பெறும்படி, உன் கவசகுண்டலங்களுக்காக வந்திருக்கிறான். இக்கவச குண்டலங்கள் உன்னிடமிருக்கும் வரையில் திரிமூர்த்திகளும் ஒருமூர்த்தியாய் வந்த போதிலும் உன்னை ஜெயிப்பது அசாத்தியம், ஆகவே அவைகளைக் கொடாதே! கொடாதே! சொன்னேன்! சொன்னேன்!

க. ஓகோ! சரி!—தேவேந்திரனே! உண்மை இன்றறிந்து கொண்டேன். தேவதேவனே! கற்பக விருட்சத்துக் காவலனாகிய தாமே வந்து கையிரந்து வேண்டும் பொழுது, நானா இல்லை என்று மறுப்பவன். இதோ பெற்றுக்கொள்ளும். [தன் கவசகுண்டலங்களைக் கழற்றிக்கொடுக்கிறான்.]

தே. கர்ணா' கர்ணா! நீயே தாதா! நீயே கொடையாளி! நீயே கொடையாளி! உன்னை நிகர்ப்பார்யார் இத்திரிலோகங்களி

னும்! மெச்சினேன்! மெச்சினேன்! அப்பா! நீவேண்டிய வரத்தைக்கேள் தருகிறேன்.

க. அமரர் அதிபதியே! அடியேன் கொடுப்பது என்னும் பதத்தைக் கற்றேனேயொழிய, கேட்பது என்னும் பதத்தைக் கற்றேனில்லை—என்னை மன்னிக்க வேண்டும்.

அசரீரி. [ஆகாயத்தில்] அப்பா! கர்ணா! தேவேந்திரனிடம் யார் மீது பிரயோகித்தபோதிலும் அவரது உயிரைக் கவர வல்ல வேலாயுதம் ஒன்றிருக்கிறது, அதைக் கேள். அதைக் கொண்டாவது நீ அர்ச்சுனனை வெல்லலாம்!

தே. கர்ணா! என்ன சொல்லுகிறாய்?

க. தேவர்கோனே! நான் சொல்வதற்கு—ஒன்றுமில்லை, முன்பு சொன்னதைத் தான் சொல்ல வேண்டும். தானம் வாங்கல் என்பது க்ஷத்திரிய தர்மமல்ல—அன்றியும் நான் மேற்கொண்ட விரதத்திற்கு விரோதப்பட்டது!

தே. கர்ணா! உன்னுடைய தயாள வார்த்தையையும் தானசீலத்தையும் மெச்சினேன், இதோ நீ கேளாமலே நான் மனமுவந்து உனக்கு இவ்வேலாயுதத்தைக் கொடுக்கிறேன். இது அபரிமிதமான சக்தியுடையது, இதை யார் மீது பிரயோகித்தபோதிலும், அவர்கள் தேவராயினும் சரி—அவர்கள் உயிரைக் கொண்டே மீளும், பெற்றுக் கொள்.

க. [அதை வாங்கிக் கொண்டு] தன்யனானேன்!

[தேவேந்திரன் மறைகிறான்.]

அசரீரி. அப்பா! கர்ணா! இதை ஜாக்கிரதையாக வைத்துவை. ஒருகால் உனது நாகாஸ்திரம் பயன்படாமற் போனால், கிரீடியைக் கொல்ல இது உபயோகப்படும் என்பதை மறவாதே!

க. உம்!—ஆ! இது யார் குரல், இந்தப் பக்கமிருந்து யாரோ ஒருவர், நான் ஒருவனிருக்கிறேன் என்பதையும் மறவாதே, என்று கூறியது?—கிருஷ்ணன் குரல் போலிருந்தது!

காட்சி முடிகிறது.

## இரண்டாம் இடைக் காட்சி.

**இடம்:—விஸ்வகர்ணன் வீடு.**

*விஸ்வகர்ணன் மனைவி அடுப்பை மூட்டி ஒரு பானையை வைக்கிறாள்.*

வி. ம. இருக்கிறது ஆழாக்கு அரிசி! இதை யாரென்று சாப்பிடுவது? [உலையில் அதைப் போடுகிறாள்] வரட்டும் சொல்லுகிறேன்! நன்றாய்ப் பூசை கொடுக்கிறேன்!

*விஸ்வகர்ணன் வருகிறான்.*

வி. எனக்காடி!—ஓகோ! இதைப் பார்த்தாயா என்ன கொண்டு வந்திருக்கிறேன்.

வி. ம. என்ன அது? பெரிய மூட்டையாகத் தானிருக்கிறது.

வி. அரிசி!

வி. ம. அரிசியா! கர்ண மகாராஜாவிடம் போயும் உம்முடைய கர்மம் விடவில்லையா? இவ்வளவு பொன் கொண்டு வந்தீர்கள் என்றல்லவோ பார்த்தேன்!

வி. ஆமாண்டி, நான் என்ன செய்வது? நான் போனபோது கர்ண மகாராஜா அரண்மனையில் இல்லை, வேட்டைக்குப் போய் விட்டதாகச் சொன்னார்கள், வெறுங்கையோடு திரும்பி வந்தால் நீ பூசை கொடுக்கப் போகிறாய் என்று எண்ணி, வழியில் கிடைத்த சாணியை ஒரு மூட்டையாகக் கட்டி சர்க்கரை பொங்கல் என்று ஒரு ஏமாந்த சோணகிரியிடம் கொடுத்து அவனிடமிருந்த இந்த அரிசி மூட்டையை வாங்கிக் கொண்டு வந்து விட்டேன். அங்கிருந்து ஒரே ஓட்டமாக ஓடி வந்தேன், எங்கே அவன் நான் செய்த சூதைக் கண்டு பிடித்து துரத்திக் கொண்டு வருகிறானோ என்று.

வி. ம. அந்த மட்டும் நல்ல யுக்திதான் செய்தீர்கள்-இப்பொழுது தான் உலையில் அரிசி போட்டிருக்கிறேன். வீட்டில் அரை ஆழாக்கு தான் இருந்தது. இதில் ஒரு படி அரிசி அதில் போடுங்கள், இந்த அகப்பையால் துழாவி விட்டால், எல்லாம் கலந்து வெந்துபோகும் ஒன்றாக.

வி. படி ஏதாவது இருக்கிறதா வீட்டில்?

வி. ம. அந்தப் படியைத் தான் நேற்று விற்று விட்டோமே— மூட்டையை அவிழ்த்து ஒரு நிதானமாக ஒரு படி அரிசி பானையில் கொட்டுங்கள்.

வி. ஆம் ஆம்! நீ நிரம்ப புத்திசாலி என்னவென்றாலும்!

[மூட்டையை அவிழ்த்து அதிலிருக்கும் மணலைப் பானையில் கொட்டுகிறான்.]

வி. ம. சரியாகக் கொட்டுங்கள்! கீழே சிந்துகிறது பாருங்கள்! இது என்ன அரிசி இப்படி இருக்கிறதே! அரிசியா இது? -மணல்! முண்டமே! எவனையோ ஏமாற்றப் போய் நீங்கள் ஏமாந்து வந்தீர்களே!

வி. மணலா? அடடா! அவன் என்னை ஏமாற்றி விட்டான்!

வி. ம. போதாக் குறைக்கு பொன்னியம்மன் குறையென்று வீட்டிலிருந்த ஆழாக்கு அரிசியும் போச்சு! முழு முண்டம்! [அகப்பையால் அடிக்கிறாள்.]

வி. நீ அடி என்னை நன்றாக! அப்பொழுது தான் எனக்கு புத்தி வரும். ஒருத்தனை ஏமாற்றப் போய் நானே தான் ஏமாந்தேன். இந்தப் புத்தியில்லாமற் போனால் அகப்பையடி விழாதே! ஆனால் அவன் மாத்திரம் என் ஊர் மணலூர் என்று சொன்னான். அவன் போனவழி எனக்குத் தெரியும்! விட்டேனா பார் அவனை? இதோ வருகிறேன், கொஞ்சம் இரு! [விரைந்து போகிறான்.]

காட்சி முடிகிறது.

# நான்காம் அங்கம்

## முதற் காட்சி.

இடம்:—கர்ணனுடைய அரண்மனையில்

பூஜாக்கிரஹத்திற்கு அடுத்த மண்டபம்.

அந்தணர் முதலிய யாசகர்கள் தாங்கள் பெற்ற தானத்துடன்

ஒரு புறம் நிற்கின்றனர். கர்ணன் மற்றொரு புறமாக அவர்களை

வணங்கி நிற்கிறான். வயோதிகனை தேர்ப்பாகன் ஒரு புறம் நிற்கிறான்.

**க.** அய்யன்மீர்! நான் கொடுத்தது ஏதோ கொஞ்சமாயிருந்த போதிலும் அதைப் பெரிதாக நினைத்து நீங்கள் விடைபெற்றுக் கொள்ளவேண்டும்.

**யாசகர்.** ஆஹா! மஹாதாதா! மஹாதாதா! என்ன விநயம்! என்ன கொடை! கொடுத்தால் இப்படி கொடுக்க வேண்டும்! கர்ணராஜனைப் போன்ற கொடையாளிகள் இதுவரையிற் பிறந்ததுமில்லை, இனி பிறக்கப்போகிறதுமில்லை! —தீர்க்காயுஷ்மான்பவ! தீர்க்காயுஷ்மான்பவ! நீடூழி வாழ வேண்டும்!

[போகின்றனர். கர்ணன் ஆசனத்தில் உட்காரப் போகிறான்.]

வாயிற் காப்போன் வருகிறான்.

**வா-கா.** அங்கராஜா, ஒரு வயோதிகப் பிராம்மணன் வந்திருக்கிறான் யாசகத்திற்காக.

**க.** வரச் சொல் உடனே [வாயில் காப்போன் போகிறான்.]

**தேர்-பா**-என்ன வரச் சொல்வது? எல்லாம் தான் துடைத்தாய் விட்டதே; இன்னும் என்ன இருக்கிறது கொடுக்க?

**க.** அப்பா,—அப்படிச் சொல்லாதே—என்ன ஏழையோ? என்ன கஷ்டமோ?

ஒரு ஏழைப் பிராம்மணன் வருகிறான்.

ஸ்வாமி, வரவேண்டும்! வரவேண்டும்! என்ன விசேஷமோ?

தேர்-பா-என்ன விசேஷமோ? என்ன வேஷமோ? முன்பு இந்திரன் வேஷம் போட்டுக் கொண்டு வந்தானே! அவன் தம்பியா யிருக்கும்!

வ. கர்ண ராஜனே! மஹாப் பிரபு! மஹா தாதாவென்று கேள்விப் பட்டு வந்தேன். என் குறை உம்மால் தான் தீர வேண்டும். நெடுந் தூரத்திலிருந்து வந்திருக்கிறேன்.

தேர்-பா-அப்படித்தான் சொன்னான் அந்தக் கிழவனும்.

க. அப்பா, கொஞ்சம் பொறும்—ஸ்வாமி, உம்முடைய குறை என்ன?

வ. வேறொன்றுமில்லை. இன்றைத்தினம் என் தாயார் திவசம்—அதை முடிக்க என் கையில் ஒரு காசும் இல்லை. அதை நிறைவேற்ற நீர்தான் ஏதாவது பொருளுதவி செய்ய வேண்டும் உடனே.

க. உம்—அப்படியே ஆகட்டும் ஸ்வாமி—அப்பா, என்மீது கோபியாதீர்—உள்ளே போய் ஏதாவது பொருள் மிருந்திருக்கிறதா பாரும்.

தேர்-பா நீ தான் போய்ப் பார்! நான் தான் அப்பொழுதே சொன்னேனே, எல்லாம் அடியுடன் துடைத்தாய் விட்டதென்று. அந்த மண்டபத்தை வேண்டுமென்றால் தானமாகக் கொடுத்துவிடு!

க. ஐயோ! அது அவருடைய தற்காலக் கஷ்டத்தை உடனே நிவர்த்தி செய்யாதே!—நான் போய்ப் பார்க்கின்றேன்.

[உள்ளே பிரவேசிக்கிறான்.]

தேர்-பா. பார்! பார்!—அங்கே ஒரு ஈ எறும்புகூட கிடையாது. இப்படிக் கொடுத்துக் கொண்டிருந்தால் எந்த பொக்கிஷம் தான் தாங்கும். ஏ! கிழப் பிராம்மணா! நீர் அதிர்

ஷ்டம் பிடித்தவர் நீர்! கொஞ்சம் முன்னே வருகிறதற் கென்ன?—ஒன்றும் கிடைக்காது இங்கே, போம்.

கர்ணன் இடது கையில் தைலம் நிரம்பிய ஒரு பொற் கிண்ணத்துடன் வருகிருன்.

க. ஸ்வாமி! என் அதிர்ஷ்டம்! இதோ இதைப் பெற்றுக் கொள்ளுங்கள். [இடது கையால் கொடுக்கிருன்.]

வ. இது என்ன இது?

க. இது பொற்கிண்ணம்—இதைக் கடை வீதியிற் கொண்டு போய் விற்று அப்பணத்தைக் கொண்டு, உம்முடைய குறையைத் தீர்த்துக் கொள்ளும்.

வ. மிகவும் சந்தோஷம்—ஆயினும் எனக்கொரு சந்தேகம்—அதைக் கேட்கலாமோ?

க. சுகமாய்க்கேளும் இனி.

வ. இதில் தைலமிருக்கிறதே—தைலமுடைய பாத்திரம் தானமாக வாங்கினல் மஹா தோஷம் என்கிருர்களே என்று யோசிக்கிறேன்.

க. ஸ்வாமி, அதை நான் கவனிக்கவில்லை என் அவசரத்தில் —அன்றியும் சுவாமி! ஒருவன் தன் தாயின் திவசத்தை திருடியாவது செய்ய வேண்டும் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன, ஆகவே இதனல் பாதகமில்லை.

வ. வாஸ்தவம்—இன்னெரு சந்தேகம்.

க. அதையும் கேட்டு விடுங்கள்.

வ. தங்களை மஹா தாதா என்று எல்லோரும் புகழக் கேள் விப் பட்டிருக்கிறேன், அப்படி யிருந்தும் இடது கையால் தானம் கொடுக்கக்கூடா தென்கிற சாஸ்திரம் உமக்குத் தெரியாததா என்று யோசிக்கிறேன்.

க. ஸ்வாமி, சொல்லுகிறேன் கேளும்—நீர் கேட்டவுடன், தான மண்டபம் முழுவதும் தேடியும் ஒன்றையும் காண தவனய் அந்தப்புறம் புகுந்தேன். அங்கே என் மனைவி தலை சீவிக்கொண்டிருந்தாள். அவள் பக்கத்தில் இப்

பொற்கிண்ணம் இருந்தது. அவளைக் கேட்டால் ஏதாவது ஆட்சேபனை சொல்லப் போகிறாள் என்று கருதினவனாய் ஒன்றும் பேசாது திடீரென்று இதைக் கொண்டு வந்து உமக்குக் கொடுத்து விட்டேன். அதில் என்ன இருக்கிறதென்று கவனித்து, அதைச் சுத்தி செய்து கொண்டு வருவதற்கு முன், என் மனைவி ஏதாவது ஆட்சேபனை செய்தாலும் செய்வாள், அதனால் என் புத்தி மாறினாலும் மாறலாம்; அன்றியும் தானம் கொடுப்பதற்கு இடது கையென்றும் வலது கையென்றும் ஏன் பேதமிருக்கவேண்டும்? மனதில் களங்கமறக் கொடுக்க வேண்டும், அதுவே முக்கியம். அன்றியும் இன்னொரு முக்கியமான விஷயம் யோசித்துப் பாரும். தானம் கொடுக்கத் தீர்மானித்தால் ஒரு க்ஷணமும் தாமதிக்கலாகாது. இது எந்தக் கையிலிருக்கிறதென்று யோசித்து, இடது கையிலிருந்து வலது கரத்தில் வாங்கிக் கொடுப்பதன் முன், அட்சணத்தில் என் உயிர் போயினும் போகும், பிறகு அந்த பலன் எனக்குக் கிட்டாமற் போமே! உம்முடைய குறையை தீர்க்காதவனாவேனே!—

வ. ஆஹா! ஹா!—மஹா தாதா என்றால் இத்திரிலோகங்களிலும் உமக்குத் தான் அப்பெயர் தகும்—இதோ என் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளும். இன்று என் குறையை நீர் தீர்த்ததுபோல் உமது மனதிலிருக்கும் குறையும் சீக்கிரம் தீருமாக!.

[போகிறான்.]

க. என் மனதில் என்ன குறையிருக்கிறது?-ஹா! அது தீரும் என்னும் ஆசையை விட்டு எத்தனை வருஷங்களாயின—

தேர். பா. ஏனப்பா! இனியாவது போஜனத்திற்கு வருகிறாயா—இல்லையா?

க. அப்பா, இன்று எனக்குப் பசிக்கவில்லை இன்னும்—நீங்கள் போய்ச் சாப்பிடுங்கள், பிறகு நான் வருகிறேன். [தேர்ப்பாகன் உள்ளே போகிறான்.] இன்று கிருஷ்ணன் அரச

சபையில் என்னை ஒரு புறமாய் அழைத்துச் சென்று கூறியதுண்மையாயிருக்குமா? "அப்பா நீ உத்தம க்ஷத்திரிய குலத்துதித்தவீரன், உன் தாயாரையும் சீக்கிரம் காண்பாய்" என்று கூறினாரே, அது மெய்யாகுமா? அல்லது பாண்டவபட்சபாதியாகிய அம்மாயவன் செய்யும் சூதுகளில் இது ஒன்றோ?—என்ன என்வலது புஜம் துடிக்கின்றது என்றுமில்லாதபடி?

வாயிற்காப்போன் வருகிறான்.

வா. அங்கராஜனே, தங்களை அதி அவசியமாகக்காண வேண்டுமென்று வாயிலில் ஒரு ஸ்திரீ வந்து நிற்கிறார்கள்.

க. ஸ்திரியா?

வா. ஆம்.

க. யார் அது? என்னை ஏன் பார்க்கவேண்டுகிறார்கள் என்று விசாரித்தாயா?

வா. நான் கேட்டதற்கு ஒன்றும் பதில் கூறாது அவசியமாக உடனே தங்களைப் பார்க்க வேண்டுமென்று தெரிவித்தார்கள்.

க. ஆனால்-வரச்சொல் உடனே. [வாயிற்காப்போன் போகிறான்.] யாராயிருக்கலாம்? அந்தோ! இத்தருணம் தானமாக என்னிடம் ஏதாவது வேண்டினால் நான் என் செய்வது?

முகத்தை முற்றிலும் வஸ்திரத்தால் மூடியபடி

குந்திதேவி வருகிறார்கள்.

க. [ஆசனம் விட்டெழுந்து] யாராயிருக்கலாம்?—இவர்கள் என்முன் தோன்றியவுடன் நான் எழுந்து இவர்களுக்கு மரியாதை செய்ய வேண்டுமென்று ஓர் எண்ணம் ஏதோ உந்துகின்றது என்னை-முகத்தைமுற்றிலும் வஸ்திரத்தால் மூடியிருக்கிறார்கள்—அம்மா, நீர்யார்? என்ன பேசாமலிருக்கிறீர்கள்?

கு. [உடல் நடுக்கமுற்று] அப்பா!—

க. என்ன ஆச்சரியம்! இக்குரலை—நான் எங்கேயோ—எந்த ஜன்மத்திலோ—கேட்டதுபோலிருக்கிறது—இந்த ஒரு வார்த்தை என் செவியில் அமிர்தத்தை விட்டது போல் என் உடலை யெல்லாம் குளிரச் செய்கிறது!—தாயே, நீர்—என்ன விந்தை! இப்பெண்மணியை என்னையுமறியாதபடி தாயே என்றழைக்கிறேன்? அம்மா!—தாங்கள் தயவு செய்து இன்னரென்று உண்மையில் எனக்கு அருளவேண்டும்.

கு. கர்ணா!—நான்தான்—உன் தாய்!

க. இது உண்மையாயிருக்குமாக!—கிருஷ்ணன் கூறியது நிஜமாகுமாக!-அம்மா! தாங்கள் நான் சொல்வதைச் சற்றே செவி சாய்த்துக் கேட்கவேண்டும்—என் அன்னையை இன்னரென்று அறிய அதிக ஆவல் கொண்டிருக்கிறேன் என்பதுணர்ந்தபலர், பொருளாசையால் என்னிடம் வந்து நான் தான் உன்னைப் பெற்ற தாய் என்று இது வரையில் அநேகர் கூறியிருக்கின்றனர்—அவர்கள் வார்த்தையின் உண்மையை அறியும் பொருட்டு ஒரு பரீட்சை நியமனம் செய்து கொண்டிருக்கிறேன். அதற்குடன்படத் தங்களுக்கு இஷ்டமோ?

கு. என்னபரீட்சை அது?

க. சொல்கிறேன் கேளும். நான் சிறுவயதில் ஒரு நாள் அரச சபையில் நான் கற்ற வில்வித்தையை, பாண்டவர்களில் நடுப்பிறந்தோனாகிய அர்ஜுனனுடன் போட்டியிட்டுக் காட்ட முயன்றபொழுது, தாட்டீகனான அவன், தாய் தந்தையறியாத இவனா என்னுடன் போட்டியிடுவது என்று கர்ண கடோமான வார்த்தை கூறினான். அதைக்கேட்டு மனம் நொந்தவனாய் அதுவரையில் என்னைத் தாய் தந்தைபோல் வளர்த்து வந்த சூதநாயகனையும் அவரது மனைவியையும் என் வரலாறு என்னவென்று வினவ, அவர்கள் தாங்கள் பிள்ளையில்லையே யென்று வருந்தி பெரும் தவமிழைத்திருந்த காலத்தில்

பேராற்றிற் பெட்டி யொன்று மிதந்துவர அதை அவர்கள் எடுத்துப் பார்த்த பொழுது, அதனுள் சிறுகைக் குழந்தையாய் நான் கிடக்கக்கண்டு, என்னைத்தாம் எடுத்துவளர்த்து வந்ததாகக் கூறினார்கள். அப்பேழையுள் ஏதாவது அடையாளம் கிடைக்குமா வென்று நான் பரிசோதித்துப் பார்த்த பொழுது, அதில்—

கு. நாகவுரிப் பட்டை நான்கு மடிப்பாக வைத்திருந்ததா?

க. அம்மா! இது உமக்கெப்படித் தெரிந்தது? ஆயினும்— ஒரு கால் இதை மற்றவர்களிடமிருந்து நீர் கேட்டிருக்கலாம்—ஆகவே அப்பரீட்சை செய்து தான் நான் பார்க்கவேண்டும்

கு. அப்பா, அதைக்கொண்டுவா இப்படி.

க. அம்மா, அவசரப்படாதீர்கள். மிகுதியையும் சற்று கேட்டுவிடுங்கள். என்னிடம் நான்தான் உனது தாய் என்றுவரும் ஸ்திரீகளிடத்திலெல்லாம் அவ்வஸ்திரத்தைக்கொடுத்து உடுத்தி கொள்ளச் சொல்வேன். அவர்கள் அதைக்கரத்தால் வாங்கி விரித்தவுடன் சிரத்தைத் திருப்பி அக்கினியினால் தஹிக்கப் பட்டவர்கள் போல் சுருண்டு, வெருண்டு, விழுந்து, புரண்டு ஓடிப்போய் விடுவார்கள். அம்மா, அப்பரீட்சைக்கு உட்பட உமக்கு இஷ்டமோ?

கு. அப்பா, உன்னைப் பெற்ற நாளில் நான் உடுத்திருந்த அவ்வஸ்திரத்தை உன் உடம்பு நோகாதிருக்கும்படி மடித்து அப்பேழையில் வைத்து உன்னை அதன் மீது வளர்த்தின இப்பாவி—அதை மறுபடியும் காணவிருப்புகிறாள்—கொண்டுவா விரைவில்

க. இதோ. [விரைந்துபோய் ஒரு பட்டுவஸ்திரத்தை எடுத்துக் கொண்டு வருகிறான்.] இஷ்டமானால் இதை வாங்கி உடுத்திக்கொள்ளும்.

கு. கொடு இப்படி. [அதைவாங்கிக்கொண்டு ஒருபுறம் போகிறார்கள்.]

க. என்ன ஆச்சரியம்! இவர்கள் தான் என் தாயார் என் பதற்குச் சந்தேகமில்லை! கிருஷ்ணன் வார்த்தை மெய்யா யிற்று—இவர்கள் யாரோ உத்தமக்ஷத்திரிய குலத்து தித்த பெண்மணி என்பதற்கு ஐயமில்லை! நடையுடை பாவனைகளினால் அது நன்கு விளங்குகிறது—ஆயினும் முகத்தை மூடியிருக்கிறார்கள்—என்ன காரணம் பற்றி?

குந்திதேவி புதிய ஆடையைப் போர்த்தவண்ணம் வருகிறார்கள்.

க. தாயே!—தாயே! தன்யனானேன்—கிருதார்த்தனானேன்! என் மனக்குறை தீர்ந்தது! என் தவம் நிறைவேறியது!—இதோ உமது சீர்தங்கிய பாதங்களுக்கு நமஸ்காரம் செய்கிறேன். உண்மையை அறியாது உம்மைப் பரீட் சித்ததற்காக மன்னிக்க வேண்டும்—உமது மைந்தனை!
[பாதத்தில் வீழ்கிறான்.]

கு. [அவனை வாரி எடுத்துக்கட்டியணைத்து உச்சிமுகர்ந்து முத்தமிட்டு] குழந்தாய்!—கர்ணா!—பெற்ற நாளிற் பிரித்த தெய்வம் இப்பொழுதாவது சற்று மனமிரங்கி இருவரையும் சேர்த்து வைத்ததே!

க. தாயே! என்னை ஈன்ற அன்னையைக்கண்டு அவர்கள் பாதபூசை செய்யும் பாக்கியம் என்று கிட்டுமோ என்று ஏங்கியிருந்தேன், அப்பரமானந்தம் இன்று கிடைத்தது! தாங்கள் இவ்வாசனத்தில் அமரவேண்டும்.
[குந்தி உட்கார, அவர்களுக்குப்பாத பூசை செய்கிறான்.]

அன்னையே! பாவியினியாவது உமது திருமுகத்தைக் கண்டு பரம சந்தோஷமடையலாமோ? [மெல்ல கரத்தால் அவர்கள் முகத்தை மூடியிருக்கும் வஸ்திரத்தை அகற்றுகிறான்.] ஹா!—குந்திதேவி!—குந்திதேவி! அம்மா! அம்மா! நீரா என்னைப் பெற்றதாய்!—உமது மைந்தனா நான்!
[பாதத்தில் மூர்ச்சையாகிறான்.]

கு. அந்தோ! மூர்ச்சையானான். [சைத்யோபசாரம் செய்கிறார்கள்.]

க. [கண்விழித்து] தாயேதாயே! தாம் என்னைப்பெற்ற விவரம்—சற்று—விரைவிற் கூறும்.

கு. நான் கன்னியாயிருந்தக்கால், என் தந்தையிடம் ஓர் முனிவர் வந்து சாதுர்மாஸ்ய விரதம் அனுஷ்டிக்கவேண் மென்று கூற, அதற்குடன் பட்ட என்தந்தை அவருக்கு ஊழியம் செய்யும்படி என்னை நியமிக்க, நான் அந்நான்கு மாதங்களும் அவருக்குத்தக்கபடி பணிவிடை செய்து வர, அவர் அரண்மனையைவிட்டுப் போகுங்காலையில், என் மீது கருணைகூர்ந்து எனக்கு ஐந்து மந்திரங் களை உபதேசித்து, ஒவ்வொருமந்திரத்தை உச்சரிக்கும் பொழுதும் ஒவ்வொரு தேவதை உன்முன் தோன்றி உனக்கு அருள் செய்யும் என்று சொல்லிப்போனார். மந்திரத்தின் மகிமையறியாத மடந்தையாகிய நான் ஒரு நாள் ஏகாந்தமாயிருக்கும் பொழுது அம்மந்திரத்தில் ஒன்றை ஜபிக்க, உடனே அம்மந்திரத்திற்கு அதிதேவ தையாகிய சூரியபகவான் என்முன் தோன்றி—என்னைச் சேர்ந்தார்—உடனே நீபிறந்தாய்—கவசகுண்டலங்களு டன்!

க. ஓ! இப்பொழுது தெரிகிறது! தெரிகிறது! எல்லா உண்மையும்!

கு. கண்ணே! மைந்தா! அவ்வேளையில் கவினுடை உன் உருவத்தையும் கவசகுண்டலத்தையும் கண்டு களிகூர்ந்த வளாயினும், உடனே கலக்கமுற்று, ஆளனில்லாமல் ஆண் மகவைப்பெற்றாள் அரசன் மகள், என்று அனைவரும் பழிப்பார்களே என்று அஞ்சினவளாய், மனம் குன்றின வளாய், பழிக்கஞ்சினவளாய், பச்சைப்பாலனுயிற்றே யென்றும் பாராமல், பெட்டகத்தில் உன்னை வைத்து ஓட்டாற்றில் விட்டேனடா! பாவிநான்! பாவிநான்!

க. தாயே! வருந்துதலொழியும். இது உமது தவறல்ல, என் பாபவசம். உமதுவயிற்றிற் பிறக்கும்படியான புண்ணி யம் செய்தும், ஏதோ என் ஜன்மாந்தர கர்மமானது உம்மை அவ்வாறு செய்யும்படி உந்தியிருக்கவேண்டும்— ஆயினும்—அம்மா! இதென்ன விந்தை இங்ஙனமாயின், நான் பாண்டவர்களுக்கெல்லாம் மூத்தவன்—தமயன்!—

கு. கண்மணியே! கர்ணு! இந்த உண்மையை உன்னிடம் கூறவே இங்கு நான் ஒருவருமறியாதபடி வந்தது. கர்ணு! நீயே என் மூத்தமகன். பாண்டவர்களெல்லாம் உனது சொந்த சகோதரர்கள், ஆகவே— இப்பொழுது நடக்கப்போகிற பாரதயுத்தத்தில், அவர்களை நீ எதிர்த்து யுத்தம் புரியலாமா? என் உதிரத்தில் உதித்த நீ, அதே உதிரத்தில் உற்பவித்த உன் தம்பிமார்களைக் கொல்லலாமா?

க. தாயே!—இப்பொழுது என்னை என்ன செய்யவேண்டும் என்கிறீர்?

கு. என்னுடன் உடனே புறப்பட்டு வந்துவிடு. அவர்களுக்கு நான் இவ்வுண்மையை அறிவிப்பேனுயின், தர்மராஜன் முதலிய ஐவரும் உன்தாள் பணிந்து உன் ஆக்கினைக்கு உட்பட்டு நடப்பார்கள். உன் தம்பிமார்கள் உதவியால் உலக முழுதும் ஏகசக்ராதிபதியாய் நீயே ஆள்வாய்'

க. தாயே! தாயே! இப்பொழுது கூறிய வார்த்தையை சில வருஷங்களுக்கு முன் வெளியிட்டிருப்பீர்களாயின் ஒருகால் அவ்வாறு நான் நடந்திருந்தாலும் நடந்திருக்கக்கூடும் இப்பொழுது இரு திறத்தாரும் யுத்தம் புரியத் தீர்மானித்திருக்கும் பொழுது நான் பாண்டவர்கள் பட்சம் போய்ச் சேர்வேனுயின், இதுவரையில் உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்ததுரோகி, என்று உலகமானது என்னைத் தூறுமன்றோ? நான் கேவலம் அனாதையாயிருந்த காலத்தில், என் சிறுவயதில் என்னை அங்க தேசத்திற்கு அதிபதியாக்கி, தனது சகல ஐஸ்வர்யத்தையும் என் தாளின் கீழ்வைத்து, தன் அரியாசனத்தில் அர்த்தாசனம எனக்களித்து, இதுவரையில் என்னை ததன் உயிர்த் தோழனுகப் பாவித்து வந்த, அந்தச் சீமானை, இத்தருணம் நான் கைவிடுதல் தர்மமாமோ? அவன் என்னை எவ்வளவு நம்பியிருக்கிறுன் என்பதை நீர் அறியீர் ஒரு திர்ஷ்டாந்தரம் கூறுகிறேன் சற்றுகேளும்.

ஒரு நாள் சுயோதனன் தர்மபத்னியாகிய பானுமதியும் நானும் தனிமையாய்ச் சொக்கட்டானாடிக் கொண்டிருந்தோம் ஓர் ஏகாந்த ஸ்தலத்தில் அச்சமயம் எனக்குப் பின்னாக சுயோதனன் வர, அதை நேராகப் பார்த்த பானுமதியானவள் ஆட்டத்தை விட்டு அவசரத்துடன் எழுந்திருக்க, அரசன் வந்த அக்காரணத்தை அறியாத நான், தோல்வி ஜெயம் தெரியுமுன் இடையில் எழுந்திராதீர் என்று அவர்களது அரையில் அணிந்திருந்த மேகலாபரணத்தைப் பற்றினேன்; மேகலை அறுந்து மணிகள் கீழேசிந்திட, அண்ணா இவைகளைப் பொறுக்க எனக்கு உத்தரவுண்டோ, என்று அவன் மனது அணுவளவும் கோணாமல், அம்மாற்றம் அறைந்த அப்படிப்பட்ட ஆத்ம நேயனுக்கு நான் துரோகியாகலாமா? நடுவாற்றில் நழுக விட்ட நன்றியற்ற நாயினும் கடையபாதகனாவேனே! அம்மா, என் பொருட்டு இதை நான் அவ்வளவாகக் கருதவில்லை இப்பொழுது. பிறகு உலகமானது என்ன கூறும்? இப்படிப்பட்ட பரமதுரோகியையா பெற்றாள் குந்திதேவி! என்று உம்மைக் குறைகூறும் இக்குவலயமானது! தாயே! அப்பழிச் சொல்லை உம்மிடம் சேர்ப்பிக்க எனக்கிஷ்டமில்லை தாயே! தாம் தமது வாய்திறந்து முதல் முதல் கேட்கும் படியான வரத்தை மறுக்கின்றேன் என்று உமக்கு வருத்தம் வேண்டாம். இதைத் தவிர வேறு ஏதேனும் கேளும் தருகிறேன்—எனதுயிரைக் கேளும் தருகிறேன்-எனதுயிரைக்கேளும் மனக்கோணாது சந்தோஷமாய், உமக்கு இட்சணம் அர்ப்பணம் செய்கிறேன். நீர் அளித்ததை மீட்டும் உமக்குக்கொடுக்க எனக்கென்ன கஷ்டம்?

கு. கண்ணே! கர்ணா! கர்ணா! எல்லாதர்மமுமறிந்த நீ கூறும்படியான நியாயத்திற்கு பெண்பாலாகிய நான் என்ன பதில் உரைக்கக் கூடும்? ஆயினும் யுத்தத்தில் உன் சொந்த தம்பிமார்களென்று அறிந்தும் அவர்களுடன் நீ போர்புரிவது தர்மமாகுமா?

க. அம்மா, அதற்கு நியாயம் கூறுகிறேன். தனுசைக்கை யிலேந்தி யுத்தம் என்று முனைந்தபின் தகப்பன் என்றும், தமயன் என்றும், தம்பியென்றும் கருதாது யுத்தம் புரிவதே க்ஷத்திரிய தர்மம்!

கு. ஆனால்— கர்ணா—எப்படியும் யுத்தம் நேர்ந்து தான்தீர வேண்டுமென்றால்—உன்னை—ஒருவரம் கேட்கிறேன், அதையாவது கொடுக்கிறாயா?

க. தாயே! ஒன்றல்ல, நான் தர்மம் தவறாது செய்யக்கூடிய நூறு வரங்கள் கேளும் தருகிறேன் அம்மா! இதுவரை யிற் பிறந்த நாள் முதல் கொடையாளிகர்ணன் எனும் பெயரை உமது உதிரத்தில் உதித்த புண்ணியத்தால் பெற்றேன். அப்படிப்பட்ட நான் தாயாகிய நீங்கள் கேட்கும் வரத்தைக் கொடாமற் போவேனா? கேளும் தைரியமாக.

கு. குழந்தாய்! கர்ணா!—அர்ஜுனன் அக்காண்டவ வனத்தை அக்கினிக்கிரையாக்கிய பொழுது அதில் நின்றும் தப்பிப்பிழைத்த அசுவசேனன் என்ற அரவத்தை நீவளர்த்து வருவதாகக் கேள்விப்பட்டேன். இனி நடக்கப்போகிற பாரதப் போரில் எப்படியும் நீ அதை அர்ஜுனன் பேரில் தொடுக்கப்போகிறாய்—தெய்வபலத்தால் அவன் அதனின்றும் தப்பிப் பிழைப்பானாயின், மறுமுறை அதை அவன் மீது பிரயோகஞ் செய்வதில்லையென்று இந்த வரத்தை எனக்கு நீ கொடுக்க வேண்டும்.

க. தாயே! கேளும்! இது நீர் கேட்டு நான் கொடுக்கும்படியான வரமாகாது, ஏனெனில், சுத்த வீரனாகிய க்ஷத்திரியன் விடும் அஸ்திரம் லட்சியம் தவறாது ஒரு கால் தெய்வாதீனத்தால் தவறுமாயின், மறுபடியும் அவ்வஸ்திரத்தைப் பிரயோகிப்பது க்ஷத்திரிய தர்மமல்ல, சுத்த வீரனுக் கடுத்ததல்ல, தனுர்வேதத்திற்கு விரோதமாகும். ஆகவே அந்நாகாஸ்திரத்தை அர்ஜுனன் மீது ஒரு முறையன்றி,

இரண்டாம் முறை விடேன்—ஆகவே, அம்மணி, வரமாக வேறு ஏதேனும் கேளும்; இது என் கடமையாகும். நான் அளிக்கும் வரமாகாதே!—வேறேதேனும் கேளும்.

கு. கர்ணா!—ஆனால் உன் தம்பிமார் ஐவருள் அர்ஜுனன் நீங்கலாக மற்ற நால்வருடன் யுத்தம் புரியும்படி நேரிட்டால், அவர்கள் உன் தம்பிமார் என்பதை நினைத்து பட்சம் வைத்து அவர்களுடன் லகுவாய் யுத்தம் செய்து அவர்களுயிரைக் காக்கவேண்டும்.

க. தாயே! இதுதாம் கேட்கத் தகுந்தவரம், நானும் கொடுக்கத் தக்கவரம்—அவ்வாறே ஆகட்டும்—அர்ஜுனன் தவிர மற்ற எனது நான்கு தம்பிகளையும் என் கையால் நான் கொல்வதில்லை, இது சத்தியம்.

கு. கண்ணே! கர்ணா! கர்ணா! உன் தயாள குணத்தை என்னென்று புகழ்வேன்! உனக்குப் பின் கொடையாளியே இவ்வுலகிலில்லை என்னும் பெயர் உலகுள்ளளவும் உனக்குக் கிட்டுமாக! இதுவே என் ஆசிர்வாதம்.

க. அம்மா! உமது திருவாக்கால் நீர் உச்சரித்த இந்த ஆசிர்வாதத்தைவிட உலகில் வேறொருபுகழை விரும்பிலன் நான். தாயே, உமது உதிரத்தில் உதித்ததின்பயனை இன்றே பெற்றேன், பெற்றேன்!—அன்னையே இனிவிடை பெற்றுக்கொள்ளும்—நீர் இங்கு வந்திருப்பதையும் என்னுடன் பேசியதையும் மற்றவர்களறிந்தால் சந்தேகத்திற்கிடமாகும், ஆகவே வந்தது போலவே உமது முகத்தை நன்றாய் வஸ்திரத்தால் மூடிச்செல்லும்—

கு. ஆம் கர்ணா, நீ கூறுவது உண்மைதான். ஆயினும் தெய்வம் என்ன கல்மனதுடையது! இப்பொழுது தான் சேயென்றும் தாயென்றும் ஒருங்கு சேர்த்த தெய்வம், எவ்வளவு சீக்கிரத்தில் நம்மைப் பிரிக்கின்றது!—குழந்தாய், நான் விடைபெற்றுக்கொள்ளுகிறேன்—

க. ஆம் அம்மணி;—ஆயினும் அன்னாய், நீர் போகுமுன் தாம் எனக்கொருவரம் அருளல்வேண்டும்.

கு. கர்ணா! கேட்போர்க்கில்லையென்னாது கொடுக்கும் வள்ளலாகிய உன்னைப் பெற்ற நான், நீ கேட்கும்படியான ஒரு வரத்தைக் கொடாமலிருப்பேனோ? தாராளமாய்க் கேள் தருகிறேன். சங்கோசப்பட வேண்டாம்.

க. அம்மணி! வேறொன்றுமில்லை—நாளை நடக்கப் போகிற பாரத யுத்தத்தில் அர்ஜுனன் கணையால் நான் ஆவி அழிவேன் என்று எனக்குள் ஏதோ தோற்றுகிறது, அப்படி நேரிடுமாயின் அதைக்கேட்டவுடன் தாம் அமர்களம் அணுகி அடியேனுடைய ஆவியற்ற உடல் மீது வீழ்ந்து மகனே என்றழைத்து, என் உடலை உமது மடிமீதிருத்தி உமது கண்ணீரால் என் உடலைக்கழுவ வேண்டுகிறேன். அப்படிச்செய்வீராயின், பாரினில் இவ்வுடலாற் செய்த பாபமெல்லாம் போய் பரிசுத்தனாவேன், அன்றியும் தேர்ப்பாகன்மகனெனப்பழிக்கும் இவ்வுலகமானது உத்தமக்ஷத்திரிய குலத்தினுதித்தவன் என்றும், பாண்டவர்களுக்கு முன் பிறந்தோன் என்றும், என்னை அறியும். இதுவே நான் உம்மைக்கேட்கும் வரம்.

கு. கர்ணா! நீ கேட்பதை நான் மறுப்பேனா, அங்ஙனமே ஆசட்டும்.

க. அம்மா—இதைச் சார்ந்த இன்னொருவரமும் வேண்டுகிறேன். அப்படிப்பட்ட சமயம் வாய்க்கும் வரையில், நானுமக்கு மகனென்றும், பாண்டவர்களுக்குத்தமயன் என்றும் இந்த இரகசியத்தை உலகில் ஒரு வரிடமும் தாம் வெளியிடலாகாது; ஏனெனில் பாண்டவர்கள் இவ்வுண்மையை யறிந்தால் தாங்கள் செய்த சபதங்கள் கெடினும் கெடுகவென்று, சண்டையை நிறுத்தி நாட்டை எனக்குக்கொடுத்து விட்டுக்காட்டிற்கு மறுபடியும் போய் விட்டாலும் போய்விடுவார்கள். நாட்டை எனக்குக்கொடுத்தால் நான் அதை சுயோதனனுக்குக் கொடுத்து விடுவேன். பிறகு பாண்டவர்கள் விரதமும் கெட்டுச்சுகமும் கெட்டவர்களாவார்கள். என் தம்பிமார்கள் செய்த

சபதம் அழியாவண்ணம் நான் அவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமை இதுவேயாகும்; ஆகவே அம்மா, அது வரையில் இந்த இரகசியம் வேறு ஒருவரிடமும் கூறாமல் இருத்தல் வேண்டும். இதுவே நான் உம்மைக் கேட்கும் இரண்டாம் வரம். இதனையும் தாம் தந்தருளவேண்டும்.

கு. அப்பா, கர்ண! நீ கூறுவதுண்மைதான், அப்படியே ஆகட்டும்.

க. அம்மா, மிகவும் சந்தோஷம், இனி நேரமாகிறது, தாம் விடை பெற்றுக்கொள்ளும்—அம்மா—உமது மைந்தன்—கர்ணன்—நமஸ்கரிக்கின்றேன்.

[பாதத்தில் வீழ்ந்து நமஸ் கரிக்கிறான்.]

கு. [வாரி எடுத்து உச்சிமுகர்ந்து] மைந்தா! மைந்தா! மறுபடியும்—எப்பொழுது—

க. பாரத யுத்தத்தில்—[குந்திதேவி முகத்தை முக்காடிட்டு, அழுத வண்ணம் மெல்ல போகிறார்கள்.]

**காட்சி முடிகிறது.**

## மூன்றும் இடைக் காட்சி.

இடம்:—அஸ்வகர்ணன் வீடு.

அஸ்வகர்ணன் மனைவி வருகிறாள்.

அ. ம. அப்பொழுது போனவர் ஏன் இன்னும் வரவில்லை? ராகு காலம், கொஞ்சம் பொறுத்து போகிறேன், என்றவரை நான் பலாத்காரம் செய்தனுப்பினேன்!—ஆ! அதோ வருகிறார் ஏதோ பெரிய மூட்டை யொன்றைத் தூக்கிக் கொண்டு!

அஸ்வகர்ணன் மூட்டையுடன் வருகிறான்.

அ. அடி! பிடித்து இறக்கு மூட்டையை!

அ. ம. என்ன மூட்டை இது?

அ. சர்க்கரைப் பொங்கல்! தெரியுமா?

அ. ம. கன்யா குமரிக்குப் போய் காக்காய் பிடித்துக் கொண்டு வந்தானும் என்றபடி, கர்ண மகாராஜாவிடம் போய் சர்க்கரைப் பொங்கல் தானா வாங்கிக் கொண்டு வந்தீர்கள்?

அ. நான் என்ன செய்வது? நான் போனபோது கர்ண மகாராஜன் அரண்மனையில் இல்லை, வேட்டைக்குப் போயிருந்தார். வெறும் கையுடனா திரும்பி வருவது என்று நான் யோசித்துக் கொண்டிருக்கையில் ஒரு யுக்தி தோன்றியது. வழியில் ஒரு ஊரில் நல்ல மணலா யிருந்தது, அந்த மணலை ஒரு மூட்டையாகக் கட்டி வைத்துக் கொண்டிருந்தேன்; ஒரு ஏமாந்த சோணகிரி இந்தச் சர்க்கரைப் பொங்கலைத் தூக்கிக் கொண்டு வந்தான்—இதை அவனிடமிருந்து ஏமாற்றி, என் மணல் மூட்டையை அரிசி என்று அவனுக்குக் கொடுத்து விட்டு, வாங்கிக் கொண்டு வந்து விட்டேன். எங்கே நான் கொடுத்த மூட்டையை அவிழ்த்துப் பார்க்கிறானோ என்று ஒரே ஓட்டமாய் ஓடி வந்தேன்!—இந்தா, இங்கு எல்லாம் குப்பையா யிருக்கிறது, சுத்தம் செய்துவை, நான்

எதிர் வீட்டுக்குப் போய் என் மைத்துனன்மார்களை யெல்லாம் அழைத்துக் கொண்டு வருகிறேன்—இரண்டு படி சர்க்கரை பொங்கல் இருக்கும்! இதை நாம் இரண்டு பெயர் மாத்திரம் எப்படிச் சாப்பிடுவது? வைத்து வைத்தாலும் கெட்டுப் போய்விடும்.

அ. ம. போய் சீக்கிரம் அழைத்துக் கொண்டு வாருங்கள்.

அ. ஒரு ஐந்தாறு தொன்னைகளை எடுத்துவை; கையிலா கொடுப்பது!
[போகிறான். அஸ்வகர்ணன் மனைவி கூடத்தைப் பெ
ஐந்தாறு தொன்னைகளைக் கொண்டு வை

அஸ்வகர்ணன் தன் மைத்துனர்களை அழைத்துக் கொ

அ. வாங்கப்பா! வாங்க! இன்றைக்கு நம்மு
சர்க்கரைப் பொங்கல் விருந்து! கொடு அடி,
களை இவர்களுக்கெல்லாம்.

விஸ்வகர்ணன் மெல்ல வந்து வாசற்படிக் கதவருகில் மறைந்திருந்து நடப்பதைப் பார்க்கிறான்.

அ. சுற்றி நில்லுங்கள்! சுடச்சுட சர்க்கரை பொங்கல்! [மூட்டையையவிழ்த்து அதில்கை யிடுகிறான்.] இதென்ன இது?

மை-ள். சாணி! சாணி!—சர்க்கரை பொங்கலா! சாணிப்பொங்கல்!—எங்களை இப்படியா ஏமாற்றுகிறீர்கள்! [தொன்னைகளால் அவனை அடித்து விட்டுப் போகின்றனர்.]

அ. ம. இதற்காகவா என் அண்ணன் தம்பிமார்களை அழைத்தீர்! உம்முடைய சர்க்கரைப் பொங்கலும் நீங்களும்!
[துடப்பத்தால் அடிக்கிறாள்.]

அ. நான் அடிபட வேண்டியது தான்! அவனை ஏமாற்றப் போய் நான் ஏமாந்தேன் அவன் மாத்திரம் அப்பொழுதே சொன்னான் தன் ஊர் சாணிகுளம் என்று—மணலுக்கும் சாணிக்கும் சரியாகப் போச்சு—

வி. [வெளி வந்து] லாபம்—துடப்பக் கட்டை அடி உமக்கு, அகப்பை அடி எனக்கு!

காட்சி முடிகிறது.

# ஐந்தாம் அங்கம்

## முதற் காட்சி.

இடம்:—குருக்ஷேத்திரத்தில் யுத்தகளத்தின் ஓர் புறம்.

காலம்:—சாயங்காலம்.

ஒருபுறம் ஸ்ரீகிருஷ்ணன் சாரதியாக அர்ஜுனன் ஒரு ரதத்தின் மீதிருக்கிறான். எதிரில் சல்லியன் சாரதியாக ன் ஒரு ரதத்தின் மீது இருக்கிறான்—கர்ணார்ஜுனன் தொருவர் சரமாரிபொழிந்து கொண்டிருக்கின்றனர்.

ச. எ ர சர்ணா, என்னென்னவோ வீம்புபேசினாயே! நேரில் விஜயனைச் சந்தித்த பொழுது அது ஒன்றும் சாயக்காணோமே! நீ எந்த அஸ்திரத்தை விடுத்தபோதிலும் அதற்கு வைரியான அஸ்திரத்தைவிட்டு அர்ஜுனன் அதை ஹதமாக்குகிறானே.

ஸ்ரீகி. அர்ஜுனா! இது தான் நமக்கு சமயம், கர்ணன் கை சற்று சலிக்கிறாற் போலிருக்கிறது. தர்மராஜனுக்குக் கூறிய வார்த்தையை மறவாதே! இன்று போரில் கர்ணனை முடித்துத்தான் நாம் திரும்ப வேண்டும்.

அ. கிருஷ்ண மூர்த்தி! அதற்குச் சந்தேகமென்ன! இதோ பிரம்மாஸ்திரத்தைப் பிரயோகம் செய்கிறேன்பாரும்!

ஸ்ரீகி. செய் செய்! சீக்கிரம்! கர்ணன் சர்ப்பாஸ்திரத்தைக் கையிலெடுத்து விடுவான் போலிருக்கிறது!

[இருவரும் பிரம்மாஸ்திரம் பிரயோகம் செய்கிறார்கள்.]

ச. என்ன கர்ணா, உன்னுடைய அஸ்திரத்தால் பகைவர் படை சேதமாகிறதே யொழிய அர்ஜுனனுக்கு ஒரு கெடுதியும் காணோமே!

க. சல்லிய ராஜனே அவனும் பிரம்மாஸ்திரத்தை விடுத்தான் அதற்கு நான் என் செய்வது? ஆயினும் பெரி

தல்ல, அர்ஜுனன் கையிலில்லா அஸ்திரம் என்னிடம் ஒன்றிருக்கிறது. அதை நான் பிரயோகிக்கிறேன் இப்பொழுது.

ச. அதென்ன அஸ்திரமப்பா அது, அர்ஜுனன் அறியாதது?

க. இதோ இந்நாகாஸ்திரம். இந்த அசுவசேனன் என்னும் நாகமானது அர்ஜுனன் காண்டவவனத்தை அக்கினிக்கிரையாக்கிய பொழுது தப்பிப்பிழைத்தது. அது முதல் அர்ஜுனன் உயிரைக்கவரவேண்டுமென்று சபதம் பூண்டிருக்கிறது. இதோ இதை இப்பொழுது பிரயோகம் செய்து அர்ஜுனனை முடிக்கிறேன்.

ச. அப்பா! கர்ணா, கொஞ்சம் பொறு, அவசரப் படாதே! இந்த அஸ்திரத்தை எங்கே குறிவைத்து விடப்போகிறாய்?

க. அர்ஜுனனுடைய கழுத்திற்குக்குறிவைத்து விடுகிறேன்.

ச. அப்பா, க்ஷணம் பொறு, நான் சொல்வதைக் கேள்—நேச விஸ்வாச பாசத்தினையுடைய ஆசாமி, மாயாப்பிரபஞ்ச மனைத்தையும் மயக்க வல்லமாயன், திரிலோகவஞ்சகனெனும் நஞ்சகன், பாண்டவசகாயன், கபடநாடக சூத்திரதாரியாகிய கண்ணன், அர்ஜுனனுக்கு முன்பாகத்தேர்த்தட்டில் உட்கார்ந்திருக்கிறார் என்பது ஞாபகமிருக்கட்டும். அவர் ஏதாகிலும் தந்திரம் செய்து உன் அஸ்திரத்தையழிப்பார், ஆகவே காண்டீபனது கழுத்திற்கு லட்சியம் வைப்பதைவிட, விசாலமாகிய மார்பிற்கு லட்சியம் வைத்துவிடு, மதுசூதனனது மாயையினால் மார்பிற் படாமல் தப்பினாலும், கழுத்திலாவதுபடும், அதுவும் தப்பினாலும் அவனது சிரசிலாவது தாக்கும். மூன்றில் ஒன்று தவறாது. ஆகவே பார்த்தன் மார்பிற் படும்படியாகப் பாம்புக்கணையை விடு.

க. சல்லியராஜனே! நீர் ஒன்றும் அஞ்சாதீர்; இந்தமாடு மேய்க்கும் மாயனால் என் கணையின் லட்சியம் தவறச் செய்யமுடியுமோ, பரமசிவத்திற் கொப்பாகிய பரசுராமராகிய என் வில்லாசிரியர் எனக்குக் கொடுத்த வில்லில் ஒரு பாணத்தைப் பூட்டி நான் எய்வேனாகில், நான் வைக்கும் குறிதப்புமோ? நான் அதிரதவீரன் என்பதை அறியாது அறைகிறீர் நீர்! இதோபாரும்!

[நாகாஸ்திரம் பிரயோகம் செய்கிறான்.]

அ. கிருஷ்ணா! என்ன நமது தேர் பூமியிற் புதைகிறாற் போலிருக்கிறதே! [ரதம்புதைகிறது.]

ஸ்ரீகி. ஒன்றுமில்லை! அர்ஜுனா! அஞ்சாதே!

[நாகாஸ்திரமானது அர்ஜுனன் கிரீடத்தைக் கவர்ந்து செல்கின்றது.]

அப்பா! அம்மட்டும் தலைக்கு வந்தது தலையணியுடன் சென்றது! கொஞ்சம் பொறு. நமது தேரைச்சரிப் படுத்துகிறேன்.

[கீழே இறங்கி சரிப்படுத்துகிறார்.]

ச. அங்கர் கோனே! அப்பொழுதே சொன்னேன் கேட்டனையா? அம்மாயன் செய்தமாயத்தைப் பார்த்தனையா? நான் சொன்னபடி பார்த்தன் மார்பிற்கு லட்சியம் நீ வைத்திருந்தால், கிருஷ்ணன் ரதத்தை அழுந்தச் செய்த போதிலும், அர்ஜுனனது தலையைக் கொண்டுபோயிருக்குமல்லவா அந்த சர்ப்பம்?—இப்பொழுதும் ஒன்றும் கெட்டுப்போகவில்லை. இதோ திரும்பிவந்தது பார், அந்நாகாஸ்திரம்! அதை அர்ஜுனன் மீது மறுபடியும் நான் சொன்னபடி குறிவைத்துத்தொடுப்பாய்.

க. சல்லிய ராஜனே, இந்த நாகாஸ்திரத்தை ஒரு முறை தப்பினால் இரண்டாம் முறைவிடுவதில்லை யென்று—ஒருவருக்கு—நான் வாக்கு தானம் செய்திருக்கிறேன் ஆகவே இதை மறுபடியும் விடேன்.

ச. யாருக்கு அப்படிவாக்கு தத்தம் செய்தாய்?

க. அதை உமக்கு நான் இப்பொழுது சொல்வதற்கில்லை. சீக்கிரம் ஒரு வேளை நீரே அறிந்தாலும் அறிவீர்.

ச. கர்ணா ! இதென்ன அநியாயம்? இப்படி உன் உயிருக்கே நீ உலை வைத்துக்கொள்ளலாமா?

க. சல்லிய ராஜனே, என்றைக்கிருந்தாலும் ஒரு நாள் அழிய வேண்டிய இவ்வுடலத்திற்காக, என்றைக்கும் அழியா, கேட்பவர்களுக்கில்லை யென்னாது வழங்கும் வள்ளல் என்னும் கீர்த்தியை, கெடுத்துக்கொள்வேனோ! அன்றியும் அதிரதத்தலைவனானவன் ஒரு பகழியை ஒரு முறை விடுவதே யொழிய அது தவறின் மறுமுறைவிட லாகாது என்னும் உத்தம க்ஷத்திரிய தர்மத்தை மறந்து பேசுகிறீரா என்ன ?

ச. அப்பா ! கர்ணா ! நான் சொல்ல வேண்டியதைச் சொன்னேன்—இனி உன்பாடு—உனக்கு நான் இதுவரையில் சாரத்யம் செய்தது போதும்; என் வார்த்தையைக் கேளாத உனக்காக நான் வருத்தப்படுவானேன். நான் போய் உன் பழய சாரதியை அனுப்புகிறேன். இனி உங்களிருவர்பாடு !

[கீழே குதித்துப்போகிறார்.]

ஸ்ரீகி. அர்ஜுனா ! தேவேந்திரன் உனக்கு முடிசூட்டிய பொழுது நான் கண்டுமகிழவில்லை இப்பொழுது உனக்கு நான் முடிசூட்டிக் கண்டுகளிக்கிறேன்.

[என்று அப்படியே செய்து.]

அர்ஜுனா ! அக்கர்ணனை இனி ஜெயிப்பாயாகத் தடையின்றி !

க. [தன்தேர் தரையில் புதைவதைக்கண்டு] ஆ ! என்ன நம்முடைய தேர் ஒரு காரணமுமின்றி பூமியில் புதைகிறதே ! —ஓகோ! அன்று அக்கன்றின் பொருட்டு பிராம்மணன் கூறிய சாபம் பலிக்கிறது போலிருக்கிறது !

[கீழே குதித்திறங்கி, தன் தேரைக் கொடுத்துத் தூக்கமுயல்கிறான்.]

ஸ்ரீகி. அர்ஜுனா! இது தான் சமயம்!

அ. கிருஷ்ண மூர்த்தி! கர்ணன் நிராயுதனாயிருக்கிறானே!

ஸ்ரீகி. அர்ஜுனா! அதையெல்லாம் இப்பொழுது கவனித்தால் முடியுமா? இந்த சமயம் தவறினால் வேறுதருணம் வாய்க்காது, பிறகு உன் சபதம் நிறைவேறுவதெப்படி? நானிருக்கிறேன் விடு உன் பாணத்தை!

அ. உத்தரவுபடி.

[பாணங்களைக் கர்ணன் மீது பொழிகிறான்.]

க. அடே! அர்ஜுனா! இதுதானா நீ அதிரதன் என்பது? யுத்தகளத்தில் யானைக்கும் அடிசறுக்கும் என்பதுபோல் என் தேரானது புதைய, அதை நிமிர்த்தும் பொருட்டு, நிராயுதனாய் நான் பிரயத்னப்பட்டு நிற்கையில் நேராக உன் பாணத்தை எய்கிறாயா? இது உனக்குச் சரியா! யாரடா உனக்கு இந்த க்ஷத்திரிய தர்மம் கற்பித்தது? இதுவரையில் வில்லுக்கொருவன் விஜயன், என்று பெயர் பெற்றிருந்ததை யெல்லாம், அரை க்ஷணத்தில் அழித்துக்கொண்டாயே? அடே த—உன் மீது தவறில்லை. இப்பொழுது தெரிகிறது. நீயாகச் செய்திருக்கமாட்டாய், உலகத்தை யெல்லாம் அழித்து பூபாரம் குறைக்க உத்பவித்திருக்கும், உன் எதிரில் உட்கார்ந்திருக்கும் உத்தமன், புத்திமதியாயிருக்கும். உன்னைப் பழித்தென்ன பயன்!

[தேரின் சக்கரக்காலின் கீழ் சாய்கிறான்.]

அ. கிருஷ்ண மூர்த்தி! என்ன ஆச்சரிய மாயிருக்கிறது. என் பாணங்கள் அவன் உடலிற் படுகின்றனவே யொழிய, அவன் தலையில்தாக்காதபடி ஏதோ தடுக்கின்றது.

ஸ்ரீகி. ஓகோ! கர்ணன் செய்ததர்மமானது அவனது தலையைக் காக்கின்றது போலும், அர்ஜுனா! சற்றுப்பொறு! இதனுண்மையை நான் அறிந்து வருகிறேன்.

[தேரை விட்டிழிந்து மறைகிறார்.]

அ. என்ன! கண்ணுக்கொன்றும் புலப்படா வண்ணம் இருள் சூழ்வது போலிருக்கிறது!

ஸ்ரீகிருஷ்ணன் ஓர் வயோதிக பிராம்மணன் வேஷத்துடன் கர்ணனிடம் அணுகுகிறார்.

ஸ்ரீகி. அந்தோ! இந்த அந்தகார இருட்டில் நான் எப்படிக் கண்டு பிடிக்கப்போகிறேன் அந்த மஹாதாதாவை!—கர்ணராஜனே! கர்ணராஜனே!

க. யார் அது என்னைப் பெயரிட்டழைப்பது?

ஸ்ரீகி. அப்பா! அந்த மட்டும் நான் அதிர்ஷ்டசாலிதான்! அப்பா, நீதானு அந்த கர்ணமஹாராஜன்? நாஸ்தி என்கிற வார்த்தை நாவினுல் நவின்றறியாத நரசிரேஷ்டன்?

க. வேதியரே, நான் தான் கர்ணன். என்ன வேண்டி இங்கு வந்தீர் இச்சமயம்?

ஸ்ரீகி. "தாண்டிய தரங்கக் கருங்கடலுடுத்த தரணியில் தளர்ந்தவர் தமக்கு
வேண்டியது அளித்தி நீ எனக்கேட்டேன் பேருவிளிடை தவம் புரிவேன்
ஈண்டிய வறுமைப் பிணியுற்றேன், இசைந்த தொன்றிக் கணத்தளிப்பாய்
தூண்டிய கவனத்து ரதத்தடந்தேர் சுடர்தர தோன்றிய தோன்றாய்"—கர்ணராஜனே! உமது கையால் ஒரு தானம் வாங்கவேண்டுமென்று நெடுநாளாக எதிர்பார்த்திருந்தேன். நான் எடுத்த இந்த ஜன்மம் நீங்கு முன் அக்குறையும் என் மனதை விட்டு நீங்க வேண்டுமென்று கோருகிறேன்

க. ஐயா வேதியரே! மற்றக்காலங்களிலெல்லாம் வராமல் இப்பொழுது வந்து சேர்ந்தீரே தேஹி என்று என்னிடம் நான் எந்த அவஸ்தையில் இருக்கிறேன் அறிந்தீரா?

ஸ்ரீகி. இரப்போர்க்கு இல்லை என்னுதை ஏந்தலே! நான் என் செய்வது? நீர் நொந்திருக்கும் சமயத்தில் நான் வந்து

சேரும்படி நேர்ந்தது! மானுபரணனே! என் மனக் குறை நீங்கும்படியாய் ஏதாவது நீர் மகிழ்ந்தளிக்க வேண்டும்.

க. ஸ்வாமி, என்னை யறிந்த நாள் முதல் இதுவரையில் ஏற் பவர்க்கு இல்லை என்னாது கொடுப்பவன் என்கிற பெய ரைப் பெற்று வந்தேன், அப்பெயர் இச்சமயம் அழியா தபடி, நீர் கேட்பது இந்தஸ்திதியிலிருக்கும் நான் கொடு க்கத் தக்கதாயிருக்கும்படி, கேட்டருளும்.

ஸ்ரீகி. என் அதிர்ஷ்டம்! நான் என் செய்வது? அங்கராஜனே, இப்பொழுது உம்மிடம் என்ன இருக்கிறது?

க. நான் ஏதோ செய்த சிறு புண்ணியம் தானிருக்கிறது,— என்று நினைக்கிறேன்.

ஸ்ரீகி. ஆனால் அதைத் தானமாகக் கொடும்.

க. ஆஹா! வேதியரே! தன்யோஸ்மி! தன்யோஸ்மி! அம் மட்டும் என் பெயரைக் காப்பாற்றினீரே! நான் கொடுக் கும்படியானதைக் கேட்டீரே! என் ஜன்மம் கிரதார்த்த மாயது! இதோ கொடுக்கிறேன், மனப்பூர்வமாய், சர்வ சந்தோஷத்துடன்! நான் செய்த புண்ணியத்தின் பலனை யெல்லாம் உமர்கு தானமாக.

"ஆவியோ நிலையிற் கலங்கிய தாக்கை அகத்தவோ
புறத்தவோ அறியேன்
பாவியேன் வேண்டும் பொருளெலாம் பயக்கும் பக்கு
வந்தன்னில்வந்திலையால்
ஒவிலாதியான் செய்த புண்ணிய மனைத்தும் உத
வினேன் கொள்கநீ யுனக்குப்
பூவில்வாழயனு நிகரலவென்றால் புண்ணிய
மிதனினும் பிறி தொன்றுண்டோ".

[தன் மார்பினின்றும் அர்ஜுனன் எய்த ஓர் அம்பைப் பிடுங்கி வெளிவராநின்ற உதிரத்தினால் தத்தம் செய்து கொடுக்கிறான்.]

ஸ்வாமி மன்னிக்கவேண்டும். தாரைவார்க்கத் தண்ணீர் கொண்டு வருமளம் இக்காயம் நிற்குமோ என்னவோ

என்னும் சங்கையால் இது செய்கிறேன்—கிருஷ்ணார்ப்பணம்—கிருஷ்ணார்ப்பணம்.

ஸ்ரீகி. [தன் சுயரூபத்துடன் அதை ஏற்று] அப்பா! கர்ணா! மஹாதாதாவாகிய உன் வாக்கினின்றும் அசத்தியம் வராது! இதோ ஏற்றுக் கொண்டேன்.

க. ஆஹா! கபடநாடக சூத்திரதாரியாகிய கிருஷ்ணா அறிந்தேன் உமது உண்மையை! இனி எனக்கென்ன குறை! உமது கை கீழாகவும் எனது கை மேலாகவும் இருக்கும் பாக்கியத்தைப் பெற்றேன்! கிருதார்த்தனானேன்—கிருதார்த்தனானேன்!

ஸ்ரீகி. அப்பா! கர்ணா! மெச்சினேன்! மெச்சினேன்! இனி நீ வேண்டியவரத்தைக் கேள் தருகிறேன்.

க. கண்ணனே! காயாம்பூவண்ணனே! என் கன்ம விசேஷத்தால் நான் வேறு பிறப்பெடுக்க வேண்டி நேர்ந்திட்டாலும், எப்பிறப்பிலும் இரப்போர்க்கு இல்லை யென்னாது வழங்கும் பாக்கியம், நீர் எனக்கருளல் வேண்டும். இதுவே நான் வேண்டும் வரம்.

ஸ்ரீகி. அப்பா! கர்ணா! அப்படியே ஆகுக. ஆயினும் இனி உனக்குப் பிறவித்துன்பமே கிடையாது. அதை நினைத்தே உனது தர்மத்தின் பலத்தை நான் தானமாகப் பெற்றது. கர்ணா! இத்திரிலோகங்களிலும் கர்ணனுக்கு மிஞ்சிய கொடையாளி பிறந்ததுமில்லை, இனி பிறக்கப் போகிறதுமில்லை என்கிற உன் புகழ் பிரளயகாலம் வரை நிலை பெற்றிருக்குமாக! கர்ணா! உன் மனதில் இன்னும் ஏதாவது குறையுண்டோ? [கர்ணனைச் கையால் தடவிக் கொடுக்கிறார்] உனக்குப் பூர்வ ஞானமுண்டாகுமாக!

க. ஆபத்பாந்தவா! அநாதரட்சகா! அறிந்தேன் உம்மை! அறிந்தேன் உம்மை!

வான்பெற்ற நதிகமழ்தாள் வணங்கப்பெற்றேன்
மதிபெற்றதிரு உளத்தான் மதிக்கப்பெற்றேன
தேன்பெற்ற துழாயலங்கற் களபமார்பும்

திருப்புயமும் கைவந்து தீண்டப்பெற்றேன்
ஊன்பெற்ற பகழியினுல் அழிந்து வீழ்ந்தும்
உணர்வுடனின் திருவாய்மை யுரைக்கப்பெற்றேன்
யான்பெற்ற பெருந்தவப் பேறென்னை யன்றி
இருநிலத்திற் பிறந்தோரில் யார்பெற்ருரே.

கருணு சமுத்திரமே! என்தம்பி அர்ஜுனன் கணையால் என் ஆவி சீக்கிரம் போகப்போகிறது. அச்சமயம் இந்த ஜன்மம் முற்றிலும் சபலமாகும்படி, உமது தேஜோமயானந்தமான திவ்ய ஸ்வரூபத்தை எனக்குக் கடாட்சித்தருளவேண்டும்! கண்ணனே! கடல் முகில்வண்ணனே!

ஸ்ரீகி. கர்ணு! அப்படியே ஆகட்டும். கர்ணு! இனி உன்பஞ்சேந்திரயங்களையும் நிறுத்த வேண்டிய நிலையில் நிறுத்திக்கொள். [மறைகிருர். இருள் நீங்குகிறது.]

ஸ்ரீகி. [தன் பழய உருவுடன் அர்ஜுனன் ரதத்தின்மீதேறி] அப்பா! அர்ஜுனு! சூர்யாஸ்தனமாகப் போகிறது அதற்குள் உன் வேலையை முடி.

அ. ஆம், இதுவரையில் யுத்தபூமியைச் சூழ்ந்திருந்த இருளும் நீங்கியது. அஞ்சலீகமென்னும் பாணத்தை விட்டு அக்கர்ணனைக் கொல்கிறேன்! [அந்தப் பாணப்பிரயோகம் செய்கிருன், அது தாக்க கர்ணன் முடிசாய்கிறது.] பார்த்தீரா! கிருஷ்ணமூர்த்தி! கர்ணனைக் கொன்று என் சபதத்தை நிறை வேற்றினேன்!

ஸ்ரீகி. அர்ஜுனு! உன் சபதத்தை நிறைவேற்றிய துண்மைதான்—ஆயினும் கர்ணனைக் கொன்றது நீ மாத்திரம் என்று கர்வப்பட்டுவிடாதே! அவனைக்கொன்றவர்கள் யார் யார் என்று சொல்லுகிறேன் கேட்பாயாக! கர்ணன் தேரின் கீழ்சிக்கி கன்று ஒன்று இறந்த பொழுது அவனைச் சபித்த அந்தணன் ஒன்று, படுகளத்தில் பாணங்களை விடும் ஞானம்குன்றிப் போமாக என்றுச் சபித்த பரசுராமன் ஒன்று, அவனுடன் பிறந்த அபேத்யமான கவசகுண்டலங்களை தானமாக வாங்கிய ஆயிரக்கண்ணன்

ஒன்று, நாகாஸ்திரத்தை மறுமுறை நரன் மீது விடலா காதென்று கர்ணனிடம் வரம்வாங்கிய தேவி ஒன்று, சாரதியாயும் உற்சாகப்படுத்தாமல் அவன் சவுரியத்தை எப்பொழுதும் இழித்துப் பேசிய சல்லியன் ஒன்று, அவனது தலையைக்காத்த தர்மத்தை தானமாகவாங்கிய நான் ஒன்று, நீ ஒன்று; ஆகவே நாம் ஏழுபெயர் சேர்ந்து இந்த மகாவீரனை முடித்திருக்கிறோம். ஆகவே நீயே செய்ததாக அகங்காரம் கொள்ளாதே! வாபோவோம்—தர்மராஜனிடம்; நீ உன் சபதத்தை முடித்ததைக்கூறுவோம்.

[அர்ஜுனனை அழைத்துக்கொண்டு போகிறார்]

**காட்சி முடிகிறது.**

---

# ஐந்தாம் அங்கம்

## இரண்டாம் காட்சி.

இடம்:—அதே இடம்.

காலம்:—மாலை.

கர்ணன் யுத்தகளத்தில் வீழ்ந்து கிடக்கிறான்.

குந்தி அலங்கோலமாய் வருகிறாள்.

கு. [கர்ணன் மேல் விழுந்து புலம்புகிறாள்.] ஆ! கர்ணா! கர்ணா! மகனே! மகனே! உன்னை மகனே என்றுரைக்கும் பாக்கியம், மண்ணின்மேல் நீ மடிந்த பின்தான் கிடைத்ததடா என் சுதனே! உன்னைப் பெற்ற காலத்தில் உலகாளன் மகள் கன்னிக்கழிவதன்முன் பிள்ளையைப் பெற்

ருள் என்னும் உலக நிந்தனைக்கஞ்சி, எள்ளளவும் இரக்கமில்லாது பெட்டகத்தில் வைத்து கங்கையாற்றில் விட்டதின் பயனடா-நான் இப்பொழுது அனுபவிக்கின் றேன்! பிறகு தேர்ப் பாகனால் எடுத்து வளர்க்கப்பட்டு, துர்யோதனனுடைய உயிர்த்துணைவனாய், அங்கதேசத் தின் அதிபதியாகியதை உணர்ந்து, எங்கிருந்தாலும் நீ சுகமாயிருந்தாற் போதுமென சந்தோஷித்து வந்தே னே! மைந்தா! மைந்தா! மற்றத் தாய்மார்களைப்போல் உன்னை வளர்க்கவும், எடுக்கவும், அணைக்கவும், பாராட்ட வும் சீராட்டவும் பாக்கியம் செய்யாத மகாபாபியாகியும், கர்ணன் மகாதாதா, அவனியில் அவனைவிட கொடை யாளிகளில்லை யென்று உன்னைப்பிறர் புகழக் கேட்டு என் நெஞ்சகத்துள்ளே சந்துஷ்டி அடைந்தேனடா என் செல்வமே! ஐயோ! இவ்வளவு வயதாகியும் இன் னும் உலக நிந்தனைக்கஞ்சி, உண்மையை வெளியிடா திருந்தேனே! அந்தோ! நீ என் மூத்த குமாரன், பாண் டவர்களுக் கெல்லாம் முன் பிறந்தோன் என்னும் உண்மையை வெளியிட்டிருப்பேனாயின், தர்மன் முதலிய உன் தம்பிமார்கள் ஐவரும், கைகட்டி உன் க[illegible]ளைப் படி நடக்க இப்பார் முழுவதும் ஒரு தனிக்குடைக்கீழ் ஆண்டிருப்பாயே ஆண்தகையே! உதிரத்தில் பிறந்த பிள்ளையாயிருந்தும் பதறாமல் ஆற்றில் விட்டப்பாவியை நாம் பார்ப்பதும் தவறு, இந்த அவனியிலிருந்தோ மாகில் நாம் அவளுக்கு நீர்க் கடன் செலுத்தவேண்டு மென்று எண்ணியே, விண்ணுலகம் சென்றனையோ? மைந்தா! மைந்தா! [கதறி அழுகிறாள்.]

ஒரு புறம் தர்மராஜன், பீமன், அர்ஜுனன், நகுலன், சஹாதேவன், ஸ்ரீகிருஷ்ணன் தீவட்டி வெளிச்சத்துடன் வருகிறார்கள்.

**த.** ஹே! கிருஷ்ணமூர்த்தி! இதென்ன ஆச்சரியம்! ஒற்றர் கள் கூறியது உண்மையாயிருக்கிறதே! எங்கள் தாயார் எங்கள் பரமவைரியாகிய கர்ணன் மீது வீழ்ந்து அழுகி

ருர்களே ! அகிலத்தில் தாம் அறியாத விஷயம் ஒன்று மில்லையென்று உறுதியாய் நம்புகிறேன். இதனுண்மையை எங்களுக்குத் தெரிவிக்கவேண்டும்.

ஸ்ரீகி. தர்மராஜனே ! இதென்ன என்னைக் கேட்கிறீர்களே ! நான் தான் உங்களை விட்டுப் பிரியாதிருக்கிறவனாச்சே ! நீங்கள் அறியாதது எனக்கென்ன தெரியும் ?

பீ. ஹே ! கிருஷ்ணமூர்த்தி ! நீலமேனியாய் ! நீர் அறியாத ரகசியம் ஒன்றுமில்லை. உள்ளதை உள்ளபடி சொல்கின்றீரா, அல்லது வந்தது வரட்டுமென்று இந்தக் கதையால் ஓரே அடியாய்—

த. அப்பா பீமா ! பொறு ! ஆத்திரப்படாதே ! கிருஷ்ணமூர்த்தி எல்லாம் சொல்லுவார்.

ஸ்ரீகி. தர்மராஜனே, நான் சிறு வயதிற் காற்றேட்டமாய் ஒரு சங்கதி கேள்விப்பட்டதுண்டு,—அதாவது குந்திதேவி ஒரு ரிஷியின் வரப்பிரசாதத்தினால் சூரிய பகவானைச் சேர்ந்து ஒரு பிள்ளையைப் பெற்றதாக, அப்பிள்ளைதான் இந்தக் கர்ணனோ என்னவோ, அவர்களையே கேட்டுப் பாரும் நீர்.

த. ஆஹா ! அப்படியா !—அம்மா ! அம்மணி ! இதென்ன ஜாலம், இஃதென்ன கோலம் ! ஆலஹாலம்போல் எங்கள் செவியை அழிக்கின்ற இந்த மாற்றம் உண்மைதானா ? சற்றே சொல்லும் விரைந்து.

கு. அப்பா ! மைந்தா ! மைந்தா ! மாயவன் பகர்ந்தது உண்மைதான் ! கன்னிப் பருவத்தில் நான் பெற்றெடுத்து நட்டாற்றில் நடுக்கமின்றி விட்ட மைந்தன் கர்ணன் தான் ! இவன் தான் என் மூத்த மைந்தன். நீங்கள் எல்லோரும் அவனது தம்பிமார்களே! உலகத்தின் பழிக்கஞ்சி இவ்வுண்மையை இது வரையிலும் வெளியிடாதிருந்தேன்.

த. அன்னையே! அன்னையே! இது என்ன அநியாயம்! அவனியில் இப்படிப்பட்ட அதர்மத்தை நான் கேட்டதில்லையே! பெற்ற தாயே பிள்ளைகளுக்குச் சத்துருவானால்! பின்னையாரிடம் இதை நாங்கள் சொல்லித் தேறுவது! ஐயோ! இப்பொழுது சொன்னவர்கள் அரை நாழிகைக்குமுன் இதைத் தெரிவித்திருக்கலாகாதா!—இதென்ன உபாயமோ, யார் செய்த மாயமோ? பிள்ளைகளுக்குத் தாயே சத்ருவாயிருந்து சதி செய்ததைக் கண்டதுமில்லை கேட்டதுமில்லை நான் இது வரையில். அன்னையே! அன்னையே! எங்கள் அறுவரையும் அழித்தீரே! பாண்டு வம்சத்தைப் பழித்தீரே! பாண்டவர்கள் தங்கள் சொந்த அண்ணனைக் கொன்ற பாபிகள் என்னும் வசையைக் கொண்டு விடுத்தீரே! அம்மா! இந்த உண்மை கர்ணராஜனுக்கு தெரியுமோ?

கு. தெரியுமடா குழந்தாய்! கிருஷ்ணமூர்த்தியானவர் பாரத யுத்த ஆரம்பத்தின் முன் உங்களைக் காக்கும் பொருட்டு, கர்ணனிடம் சென்று உண்மையை அறிவித்து அர்ஜுனன்மீது நாகாஸ்திரம் ஒரு முறைக்குமேல் விடலாகாதென்றும், அவனைத் தவிர மற்ற நால்வர்களாகிய உங்களுடன் யுத்தம் செய்யும்பொழுது உங்களைக் கொல்லலாகாதென்றும் வரம் கேட்டு வரும்படிச் சொன்னார். அப்படியே நான் கர்ணனிடம் சென்று நான் அவனது தாயென்பதை ரூபித்து; இவ்விரண்டு வரங்களையும் பெற்று வந்தேன்.

த. அம்மா! அம்மா! இதையேன் முன்பே எங்களுக்குத் தெரிவிக்காமற் போனீர்கள்? இதை யறிந்திருப்போமாயின் இவ்வுலகனைத்தையும் அவரை ஆளவிட்டு அவர் பாதத்தின் கீழ் நாங்கள் குற்றேவல் புரிந்து வாழ்ந்திருப்போமே!

கு. அப்படித்தான் சொன்னான் கர்ணனும். அதற்காகத்தான் என்னிடமிருந்து தான் இரண்டு வரம் கேட்டு வாங்கினான்.—ஒன்று தான் மடிந்த பிறகு தன் தாய் நான் என்

பதை உலகோர் அறியும்பொருட்டு படுகளத்தில் வந்து நான் தன் உடல் மீது வீழ்ந்து புலம்ப வேண்டுமென்றும், இரண்டாவது அது வரையில் இவ்வுண்மையை ஒருவருக்கும் வெளியிடலாகாதென்றும், இந்த ரகசியம் உங்களுக்குத் தெரிந்தால், நீங்கள் தனக்கு ராஜ்யத்தை ஒப்புவிப்பீர்களென்றும், பிறகு நீங்கள் செய்த சபதமெல்லாம் கெட்டுப் போகுமென்றும் வருந்தியே இவ்வாறு செய்தானடா, உங்கள் நன்மையின் பொருட்டு தயாளமூர்த்தியாகிய உங்கள் தமயன்!

துர்யோதனன் சகுனி முதலியோருடன், சேவகர்கள் பந்தங்கள் பிடிக்க மற்றொரு பக்கமாக வந்து பார்க்கிறான்.

த. ஆஹா! தெய்வமே! தெய்வமே! இப்படியும் இருந்ததா உண்மை! [கர்ணன் பாதத்தில் வீழ்ந்து] அண்ணா! அண்ணா! கர்ண ராஜனே! கர்ணராஜனே! ஜன்மத்துவேஷம் படைத்த நாங்கள் உமது தம்பிமார்கள் என்று கண்டவுடன், தம்பிமார்களுடைய சபதத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று தன்னுயிரையே அளித்த தயாபரனே! வெற்றிவேலேந்திய வேந்தனே! எங்கள் பிழைகளைப் பொறுக்கும் சாந்தனே! சிம்மாசனத்தில் நீர் சிம்ஹம் போல் வீற்றிருந்து பார் அனைத்தும் ஓர் குடைக்கீழ் ஆள, நாங்கள் ஐவரும் உமது திருவடியின் கீழிருந்து தாம் இட்ட வேலையைத் திட்டெனவே செய்யும் பாக்கியம் கிடைக்காப் பாவிகளானோமே! அண்ணா! அண்ணா! ஆயிரக்கணக்கான பாணங்களை உம்மீது தொடுத்தேன், நீர் விடுத்த பாணங்களினின்றும் தப்பினோமே என்று சந்தோஷித்தேன். உண்மையை அறியாது உமது உயிரைப் போக்கவேண்டுமென்று எத்தனையோ யோசனைகள் செய்தேன். முடிவில் தனஞ்செயன் பகழினால் நீர் மனம் சலித்து பாரினிற் சாய்ந்தீர் என்று கேள்விப்பட்டு, பேருவகை கொண்டேன் பெரும்பாவி நான்! தாம் தரணியிலிருந்த பொழுது தம்மை அண்ணா

வென்று என்வாக்கினால் அழைத்து இன்புறப் பெறாத பாவி இதோ அலறுகின்றேன்! நற்றாயைப்பிரிந்த கன்று போல் கதறுகின்றேன்! கர்ணராஜனே! என்காதுகள் இன்பமடைய என்னை மன்னித்ததாக ஒருவார்த்தையாவது கூறமாட்டீரா' அண்ணா! அண்ணா!

பீ. அங்கராஜதிலகமே' அண்ணா! அண்ணா' உண்மையை முன்பு உணர்ந்திருப்போமாகில் கண்ணின் மணி போல் உம்மைக் காத்திருப்போமே! கைதவப்போரில் வீணாக உம்மீது கணைகளைத் தொடுத்தேன், கணையினும் குரூரமான கடுமொழிகளை மொழிந்தேன்! எந்தப்பாவியும் எள்ளளவாவது உண்மையை உரைக்காமற் போனார்களே!— எல்லாம் இந்தமாயனால் வந்தது! எல்லாம் அறிந்திருந்தும் வாய் பேசாதிருந்து, தம்பிமாரகளைக் கொண்டு தமயனைகொல்வித்துவிட்டு, கோழித்திருடிக் கூடக்குலாவினாள் என்பதுபோல் எங்களுடன் நீரும் கண்ணைப் பிசைந்து கொண்டிருக்கிறீரே!

த. அப்பா! பீமா! அவரை வையாதே! நமது ஊழ்வினைப் பயனாகும் இது!

அ. ஜேஷ்டப் பிரபுவாகிய சிரேஷ்டனே! இப்பொழுது அறிந்த உண்மையை அரை நாழிகைக்குமுன் அறியாமற் போனேனே! கொடும்பாவி! ஐயோ! உம்முடைய தீர மார்பில் நான் விடும்படியான பாணங்கள் என்னையே கெடுப்பதுணராமல் உம்மைக் கெடுத்ததாக எண்ணி உடல் பூரித்தேனே' உலகாளப்பெரும் திறல்வாய்ந்த உத்தமனே! நீர்தொடுத்த நாகாஸ்திரத்திற்குத் தப்பிப்பிழைத்தேன் என்று மெத்தவும் மகிழ்ந்தேனே! அப்பாணத்தினால் இறந்திருப்பேனாயின் உடன் பிறந்தோனாகிய உம்மைக்கொன்ற பாபம் என்னைச் சூழ்ந்திராதே! வெண்டாமரையணிந்த திண்டோளுடைய தினகரன்சேயே! உம்மை இழித்துப் பேசியவார்த்தைகளை நான் நினைத்தாலும் என் நெஞ்சம்பகீர் என்கிறதே! இரட்போர்க்கு என்

றும் இல்லை என்னுது ஈயும் ஏந்தலே! உமது ரதம் பூமியில் அழுந்திய பொழுது தோள் கொடுத்துத் தூக்கியதோன்றலே! என் உயிரைக்காக்கத் தன்னுயிரை கொடுத்த தயாபரனே! இனி நாங்கள் இந்த யுத்தத்தில் வெற்றி பெற்று தான் என்ன பிரயோஜனம்? தமயனைக்கொன்ற நாங்கள் தரணி ஆள்வதா!—ஹே கிருஷ்ண மூர்த்தி! இவ்வளவு வஞ்சகம் உமது நெஞ்சகத்திருந்ததென்று இதுவரையில் அறியாமற்போனேனே! வஞ்சகநெஞ்சினையுடைய அஞ்சன மேனியனே! இப்பொழுது தெரிவித்ததை அப்பொழுது தெரிவித்திருக்கலாகாதா! தன் கையைக் கொண்டு தன் கண்ணைக்குத்திக் கொள்ளச் செய்வது போல, தம்பியைக்கொண்டு தமயனுக்கு உலை வைத்தீரே!—

ஸ்ரீகி. [ஒரு புறமாக] அர்ஜுனா! யுத்த ஆரம்பத்தில் உனக்கு போதித்ததை யெல்லாம் இதற்குள் மறந்தனையே! யார்யாரைக்கொல்வது? உன் ஞானக்கண்ணைத்திறந்து பார்!

ச. கிருஷ்ணமூர்த்தி! உமதுமனம் திருப்தி அடைந்ததா! பூர்வம் ஒரு அவதாரத்தில் பிள்ளையைக்கொண்டு பிதாவின் உயிருக்கு உலைவைத்தீர், இந்த அவதாரத்தில் தம்பியைக்கொண்டு தமயனுயிருக்கு உலைவைத்தீர்; உம்மைப்பழிப்பதில் என்னபிரயோஜனம், நீர் வந்த வேலையை விரைவில் முடியும்!

ஸ்ரீகி தர்மராஜனே! தம்பிமார்களுக்கு நீர் தைரியம் சொல்வதைவிட்டு நீரே என்ன இப்படித் தயங்குகிறீர்? தாம் க்ஷத்திரிய தர்மத்தை மறக்கலாமோ? யுத்தமென்றால் தந்தை, தனயன், தம்பி என்று பார்க்கலாகுமோ? நடந்தது நடந்துவிட்டது. நாமினி என்னசெய்யலாம்? மேல் நடக்க வேண்டிய காரியங்களைக் கவனிப்போம். படுகளத்தில் ஒப்பாரியாகுமோ? கர்ணமஹாராஜனுக்கு நாம் செய்ய வேண்டியகடனை நாளை போனபின் தான் செய்ய வேண்டும்—உம்முடைய தாயையும் தம்பிமார்களையும் தேற்றி அழைத்துவாரும் பாசறைக்கு.

த. தெய்வமே! தெய்வமே! இப்படியும் இருந்ததா எங்கள் கதி! இனி நாங்கள் யுத்தத்தில் ஜெயம் பெற்றால் என்ன பெருமைபோனாலென்ன !—ஆயினும் கிருஷ்ண மூர்த்தி சொல்வது நியாயம்தான். எது நேர்ந்தபோதி லும் நம்முடைய கடமையை நாம செய்யவேண்டும். அம்மா! குந்திதேவி! வாருங்கள். இப்பொழுது துயரப் பட்டென்னபயன்! இந்த புத்தி அப்போழுதேயிருந்தி ருக்கவேண்டும் இனிமேலாவது எப்பொழுதும் ஸ்திரீ களின் மனதில் ஒரு ரகசியமும் நிலைக்காதிருக்குமாக!

[தம்பிமார்களேயும், குந்திதேவியையும் அழைத்துப் போகிறார். கிருஷ்ணன் போகிறார் வேலையாட் களுடன.]

து. மாமா! இதென்ன விபரீதமாய் முடிந்ததே! நமது ஒற் றர்கள் கூறியவார்த்தை உண்மையாச்சுதே! இனி பேச்சேன்! நாடாண்டவர்களும் பாண்டவர்கள் காடாண் டவர்களும் பாண்டவர்களாகப் போச்சுதே! இனி என்ன இருக்கின்றது? கர்ணனுடன் பாரதயுத்தம் முடிந்தது!

சகு துர்யோதனா! பயப்படாதே! நானிருக்கிறேன், நீயிருக் கிறாய்—

து நாளைத்தினம்சாக!—வாரும்.

[சகுனியை அழைத்துக்கொண்டு போகிறான்.]

இதுவரையிற் பிரகாசித்துக்கொண்டிருந்த சந்திரிகை மறைகிறது, இருள் சூழ்கிறது.

ஆசாயத்தில் ஒருபுறமாக, ஸ்ரீமந்நாராயணன் சங்குசக் கரத்துடன் தேஜோரூபமாகத் தோன்றுகிறார்.

ஸ்ரீநா. கர்ணா! வா! [கர்ணனுடைய தேஜஸ அவர் பாதங்களிற் கலக்கிறது.]

காட்சி முடிகிறது.

நாடகம் முற்றியது.